பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 04 சனிக்கிழமை (17.05.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 172

## கொழும்புக் கோட்டையில் கொடூரம்

# தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 9 பொலிஸார் உட்பட 10 பேர் பலி!

## 90 பேர் வரை படுகாயம்

கொழும்பு, மே 17

**தலைநகர் கொழும்பில், உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமான கோட்டையில் ஜனாதிபதி செயலகத்துக்கு மிக நெருக்கமாக சங்கபோதி விஹாரையை அண்டி நேற்று நண்பகல் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மூன்று பெண் பொலிஸார் உட்பட எட்டுப் பொலிஸாரும் மற்றும் இருவரும் பலியாகினர். 90 பேர் வரை படுகாயமடைந்தனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அஞ்சப்பட்டது.**


தரித்துநின்றகலகம்அடக்கும்பொலிஸாரின் பஸ்ஸை, மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைக் குண்டுதாரி இலக்கு வைத்து மோதித் தாக்கியிருக்கிறார் எனக் கருதப்படுகின்றது.

கோட்டையில், ஜனாதிபதி செயலகம், நிதி அமைச்சுச் செயலகம், கலதாரி ஹோட்டல், ஹில்டன் ஹோட்டல், (12ஆம் பக்கம் பார்க்க)

## கல்லடியில் கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, காத்தான்குடி கல்லடிப் பகுதியில் நேற்றுமுற்பகல் 11.15 மணியளவில் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டதெனக் கருதப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தை அடுத்து பொலிஸாரோடு இராணுவத்தினரும் இணைந்து அப்பகுதி (12ஆம் பக்கம் பார்க்க)



## கிழக்கு முதலமைச்சராகப் பிள்ளையான்

கொழும்பு, மே 17

புதிதாகஉருவாக்கப்பட்ட கிழக்குமாகாணசபையின்முதலாவது முதலமைச்சராக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) நேற்று மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

மாகாணசபையின் வேறு மூன்று அமைச்சர்கள் உட்பட அரசுத் தரப்பில் மொத்தம் 18 உறுப்பினர்களும் நேற்று ஜனாதிபதியின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதிகளில் விமானக்குண்டு வீச்சு

கொழும்பு, மே 17

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இருவேறு பகுதிகளில் விமானப் படையினரின் ஜெற் விமானங்கள் நேற்றும் மற்றும் நேற்றுமுன்தினமும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

முல்லைத்தீவு,வெற்றிலைக் கேணிக்குத் தெற்கே கட்டைக்காடு, முள்ளியான் பகுதி (12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபையில் அரச தரப்பு அறுதிப் பெரும்பான்மையை இழந்தது

### ஹிஸ்புல்லாவுடன் மூவர் தனிக்குழுவாக வெளியேறியதால்

கொழும்பு, மே 17

கிழக்கு மாகாண சபையில் அரச தரப்பில் - ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் - உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா உட்பட மூன்று முஸ்லிம் உறுப்பினர்கள் அரசுத் தரப்பிலிருந்து வெளியேறித் தனிக்குழுவாக இயங்க முடிவு செய்திருக்கின்றனர். இதனால் கிழக்கு மாகாணசபையில் ஆளும் தரப்பாக முன்னிலை வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சபையில் (12ஆம் பக்கம் பார்க்க)

## தொடரப்போகும் எமது ஆட்சியின் பயணம் முட்கள் பரப்பப்பட்ட பாதையில் ஆனது

### கிழக்கு மாகாணத்தின் புதிய முதலமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, மே 17

"கிழக்கு மாகாண சபையில் இனி வரும் காலங்களில் நாம் தொடரப்போகும் ஆட்சியில் நாம் பயணிக்கப்போவது முட்கள் பரப்பப்பட்ட பாதை என்பதனை நாம் நன்கு அறிவோம்."

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கிழக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## காற்று, சூரிய ஒளி புகா அறையில் ஊடகவியலாளர் திஸநாயகம் சிறை!

### சர்வதேச மன்னிப்புச்சபை பெரு விசனம்

கொழும்பு, மே 17

பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினால் கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர் ஜே.எஸ்.திஸநாயகம் காற்றோட்டமற்ற அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, கடந்த 12ஆம் திகதி அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டபோதிலும், அதிகாரிகள் அதனைச் செயற்படுத்தவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த இரு மாதங்களாக எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிக்கும் பத்திரிகையாளர் திஸநாயகம் தொடர்பாக அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி மன்னிப்புச் சபை விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

திஸநாயகம் தனது ஊடகப் பணியூடாகத் தனது கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காகவே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனக் கவலை வெளியிட்டும் -

அவரை சித்திரவதை, துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தக்கூடாது எனவும் குடும்பத்தினரையும் சட்டத் தரணியையும் மருத்துவரையும் சந்திப்பதற்கு அவருக்கு அனுமதி வழங்கவேண்டும் என கோரிக்கை விடுத்தும் - செயல்களில் ஈடுபட்டார் என அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படாத பட்சத்தில் - சுதந்திர நீதிமன்றத்தினால் அவர் தடுத்து வைக்கப்படாத பட்சத்தில் - அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் -

(11ஆம் பக்கம் பார்க்க)

## மடுத்தேவாலயத்தை ஆலய நிர்வாகத்திடம் கையளிப்பதற்கு படைத் தரப்பு இணக்கம்

### சந்திப்பின் பின்னர் மன்னார் குருமுதல்வர் கூறுகிறார்

மன்னார், மே 17

இரண்டு மாதங்களின் பின் மடுத் திருத்தலப் பிரதேசத்தை ஆலய நிர்வாகத்திடம் கையளிப்பதற்கு படைத்தரப்பு இணக்கம் தெரிவித்திருக்கிறது என மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் படைத்தரப்பு (12ஆம் பக்கம் பார்க்க)

ஊடக அனுசரணை உதயன் CHESS ENCOUNTER - 2008

யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம், யாழ். இந்துக் கல்லூரி இன்ரக்ற் கழகத்துடன் இணைந்து நடத்தும்

மாவட்ட மட்டத்திலான, மாபெரும் சதுரங்கச் சுற்றுப் போட்டி

இடம்: குமாரசுவாமி மண்டபம், யாழ். இந்துக் கல்லூரி. திகதி: 19,20/05/2008

நேரம்: காலை 8.30 இன்ரறக்ட் கழகம், சதுரங்கக் கழகம் - யாழ். இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'உதயன்' ஊடக அனுசரணையுடன்

# மாபெரும் சதுரங்கச் சுற்றுப்போட்டி திங்களும், செவ்வாயும் யாழ்.இந்துவில்

### பாடசாலை அணிகள் பங்கேற்கும்

யாழ்ப்பாணம்,மே17

யாழ்.இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் கல்லூரியின் இன்ரக்ற கழகத்துடன் இணைந்து 'உதயன்' ஊடக அனுசரணையுடன் நடத்தும் மாபெரும் சதுரங்கச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

15 வயது, 19 வயது என இரு பிரிவு களாக நடத்தப்படும் இந்தச் சுற்றுப்போட்டியில் பாடசாலை அணிகள் மட்டுமே பங்குபற்றலாம். மாணவர்கள், மாணவிகளுக்கு தனித்தனிப் பிரிவுகளாகப் போட்டிகள் நடத்தப்படும்.

போட்டியாளர்கள் சதுரங்கப்பலகை, சதுரங்கக் கடிகாரம் ஆகியவற்றை கொண்டு வர வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்
திருமதி குணராஜா புஸ்பலதா
அவர்களின் அன்புத் தாய்

### அமரர்
### கிருஸ்ணன் நகுலேஸ்வரி

அவர்கள் இறைபதம் எய்தியமை இட்டு அவரின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

(A)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் சிவஞானவதி

சேமப்புலம் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராயைச் சேர்ந்த அம்பலவாணர் சிவஞானவதி நேற்று (16.05.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சேமப்புலம் வீதி,*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*
*தொ.பே.222 6492*

*தகவல்:*
பாலேந்திரன் (மருமகன்),
ரேவதி பாலேந்திரன்
(மகள் - புனர்வாழ்வுப் பிரிவு,
யாழ்.செயலகம்)

(B)

## குறைந்த கட்டணத்தில் உழவு இயந்திர சேவை

யாழ்ப்பாணம், மே 17

கைதடி கமநல சேவைகள் நிலையத்தினர் குறைந்த கட்டணத்தில் உழவு இயந்திர சேவையினை ஆரம்பித்துள்ளனர்.

காலபோக நெற் செய்கை வயல்களில் உழவு வேலைகள் மேற்கொள்ள விரும்புவோர் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

## ஊர்காவற்றுறையில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மே 17

ஊர்காவற்றுறை கடற்கரையில் அழுகிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

சடலத்தை கண்ட பொதுமக்கள் வழங்கிய தகவலின் பேரில் சடலத்தை மீட்ட ஊர்காவற்றுறைப் பொலிஸார் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர். (01-78)

## முருங்கனில் பொலிஸ் சார்ஜன்ட் சுட்டுக்கொலை

மன்னார் - வவுனியா பிரதான வீதியை அண்டியுள்ள மல்லவராஜன் - கட்டையடம்பன் பிரதேசத்தில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டார்கள் என்று கூறப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் பிரிதிரத்ன (வயது -47) என்பவரே காயமடைந்த நிலையில் முருங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு வைபவமும்

யாழ்ப்பாணம், மே 17

நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையின் ஆறாவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சிவஸ்ரீ கு. தியாகராசாக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா கலந்து கொள்வார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருளப்பு யோகம்மா

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

நெடுந்தீவு 13 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளப்பு யோகம்மா நேற்று (16.05.2008) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் அருளப்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராமநாதர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அகஸ்ரீன் - அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயக்குமார் (பிரான்ஸ்), தவக்குமார் (கனடா), தேவகுமார் (ஆஸ்திரேலியா), அனுசியா ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வி (பிரான்ஸ்), நிஷானி (கனடா), சுபா (ஆஸ்திரேலியா), சிறீமுகுந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், நிகேஷ், எளினா, அஸ்வினா, அட்சயன், சாத்விகா, கிருஷ்டிகா ஆகியோரின் அன்புப் போர்த்தியும், புஸ்பவதி, காலஞ்சென்ற கனகம்மா மற்றும் சேதுப்பிள்ளை, காலஞ்சென்ற கோபால் மற்றும் பார்வதி, பேரம்பலம், துரைராஜா, புவனேஸ்வரி, லலிதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அல்பிரெட், காலஞ்சென்றவர்களான றோசலின், திரேசம்மா, பசுபதி மற்றும் சுந்தரலிங்கம், வரதராஜா, தவமணி, சிவஞானசுந்தரம், காலஞ்சென்ற அற்புதமலர் மற்றும் யேசுதிலகம், காலஞ்சென்ற குலசிங்கம், குகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*91/14 A, இந்து மகளிர் ஒழுங்கை,*
*கந்தர்மடம்.*

(74222)

தகவல்:
அருளப்பு (கணவர்)

### சீனியர் கனகசபை (ஆசாரியார்)

(முன்னாள் சிற்றூழியர், திருமலை கடற்படை)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சீ.கனகசபை 15.05.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நித்தியலட்சுமியின் அன்புக் கணவரும், தேவகி, காலஞ்சென்ற வாசுகி, தில்லைநாதன், வசந்தராணி ஆகியோரின் தந்தையும், தவராசா, ஜெயந்தி, கதிர்காமநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (16.05.2008) வெள்ளிக்கிழமை முழக்கன் மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வல்லை றோட்,*
*(கலாமினி கல்யாண மண்டபம்*
*முன்பாக), அச்சுவேலி.*

(74224)

தகவல்:
தில்லைநாதன் (மகன்),
தவராசா (மருமகன்).

## வலி.கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி (வது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/06 இலக்கம்கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களை தெரிவுசெய்வதற்கான விதிகள்.

இதற்கு அமைய யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997.02.17 ஆம் திகதிய 963/1 இலக்கம்கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 க்கு அமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர்குறித்து நியமித்துள்ளேன். கிளைக்குழு தெரிவு நடைபெறும் திகதி 25.05.2008 நேரம் முற்பகல் 10 மணி.

### கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களும் தவிசாளர் பெயரும்

| கிளை இல. கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1. அச்செழு | திரு.ச.சசிகரன் | அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம். |
| 2. அச்செழு வடக்கு | திரு.அ.ஜேம்ஸ் மேஷன் | அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம். |
| 3. நீர்வேலி வடக்கு | திரு.இ.விஜயமோகனராசா | நீர்வேலிக் கிளை, இலக்கம் 03.இல் இயங்கும் பாலர் பாடசாலை. |
| 4. நீர்வேலி விக்னேஸ்வரா | செல்வி சு.கமலலோஜினி | R.C.தமிழ்க் கலவன் பாடசாலை, நீர்வேலி வடக்கு. |
| 5. நீர்வேலி மத்தி | திருமதி க.நல்லதம்பி | நீர்வேலி மத்தி சனசமூக நிலையம். |
| 6. நீர்வேலி சந்தி | திரு.ச.சசீந்திரன் | R.C.தமிழ்க் கலவன் பாடசாலை, நீர்வேலி வடக்கு. |
| 7. நீர்வேலி இராச வீதி | செல்வி சி.சிவஜோகினி | கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி. |
| 8. நீர்வேலி கரந்தன் | திரு.ச.பாலகுமார் | கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி. |
| 9. நீர்வேலி கோயிலடி | திரு.க.கமலநாதன் | ஸ்ரீமுருகன் ஐக்கிய நாணய சங்கம், நீர்வேலி கந்தசாமி கோயிலடி. |
| 10. நீர்வேலி பூதர்மடம் | திருமதி இ.ஹேமாவதி | ஸ்ரீமுருகன் ஐக்கிய நாணய சங்கம், நீர்வேலி கந்தசாமி கோயிலடி. |
| 11. நீர்வேலி ஐங்கரன் | திருமதி சு.தாட்சாயினி | கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம். |
| 12.கோப்பாய் சந்தி | திரு.ந.பிரபாகரன் | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம். |
| 13.கோப்பாய் விநாயகர் | திருமதி சி.கணேசு | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம். |
| 14.கோப்பாய் கண்ணகை | திரு.தி.வித்தககலாநிதி | றோமன் கத்தோலிக்க பாடசாலை, வேதக்கோயிலடி. |
| 15. கோப்பாய் அம்பாள் | திரு.ஐ.நாகேஸ்வரன் | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம். |
| 16.கோப்பாய் இராசவீதி | திரு.பொ.மகேஸ்வரன் | கோப்பாய் காளி கோயிலடி சனசமூக நிலையம். |
| 17. கோப்பாய் மத்தி | திருமதி ஜெ.அருளினி | நாவலர் வித்தியாலயம், கோப்பாய் மத்தி. |
| 18. கோப்பாய் மத்தி | திரு.க.கணேசு | நாவலர் வித்தியாலயம், கோப்பாய் மத்தி. |
| 19.கோப்பாய் மத்தி | திரு.எம்.எஸ்.சண்முகநாதன் | வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடி ச.ச.நிலையம், கோ. |
| 20. கோப்பாய் தெற்கு | திருமதி பா.கலைச்செல்வி | கலைவாணி சனசமூக நிலையம். |
| 21.கோப்பாய் தெற்கு | திரு.அ.விமல்ராஜ் | ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையம், கோ.தெற்கு. |
| 22.கோப்பாய் தெற்கு | திரு.வி.ஜெயந்தன் | வளர்மதி சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு. |
| 23. உரும்பிராய் சந்தி | திரு.அ.தயாளன் | ஞானவைரவர் சனசமூக நிலையம், உரு.தெற்கு. |
| 24.உரும்பிராய் தெற்கு | திரு.E.S.சிறிதரன் | உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |
| 25.உரும்பிராய் கணேசா | திரு.க.நிமலன் | உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |
| 26. உரும்பிராய் கிழக்கு | திரு.வெ.பிரதீஸ்குமார் | செல்லப்பா சனசமூக நிலையம், உரு.கிழக்கு. |
| 27. உரும்பிராய் வேதக்கோயிலடி | திரு.இ.பாலச்சந்திரன் | றோமன் கத்தோலிக்க பாடசாலை, வேதக்கோயிலடி. |
| 28. உரும்பிராய் கரந்தன் | திரு.மு.சிறிக்குமார் | கலைவாணி சனசமூக நிலையம், உரு.கரந்தன். |
| 29.உரும்பிராய் வடக்கு | திரு.க.செல்வசோதி | கணேசா சனசமூக நிலையம், உரும்பிராய் வடக்கு. |
| 30. ஊரெழு | திரு.சி.குணாளன் | ஊரெழு கணேசா வித்தியாலயம். |
| 31. ஊரெழு மேற்கு | திரு.வை.கயிலைநாதன் | ஊரெழு கணேசா வித்தியாலயம். |
| 32. ஊரெழு வடக்கு | திரு.அ.சீராளன் | ஊரெழு கணேசா வித்தியாலயம். |
| 33.இருபாலைச் சந்தி | திரு.க.திசாகரன் | கோப்பாய் மகாவித்தியாலயம், இருபாலை கோண்டாவில் வீதி. |
| 34. இருபாலை கிழக்கு | திரு.வி.சிவகுமார் | பாரதி சனசமூக நிலையம், இருபாலை கிழக்கு. |

கிளைப்பொதுச் சபைக் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற்கனவே கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம். கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத்தகுதியுள்ள உறுப்பினர்களினை குறித்த அறிவிப்புக்களின் படி கிளைப் பொதுச்சபை கூட்டங்களிற்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமைகொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,*
*857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.16.05.2008*

*பொ.சிவலிங்கம்,*
*கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணசபை சிறப்பாகச் செயற்பட்டால் அதற்கு சர்வதேச அபிவிருத்தி உதவி அதிகம் கிட்டும்

## ஐ.நா.அதிகாரிகள் மட்டத்தில் தகவல்

கொழும்பு, மே 17

கிழக்கு மாகாணசபை வெற்றிகரமாகச் செயற்பட்டு சர்வதேச உதவி வழங்குநர்களினதும், நிதியமைப்புகளினதும் நம்பிக்கையைப் பெறுமானால் அப் பிரதேசத்திற்கு அதிகளவான மனிதாபிமான உதவிகளும் அபிவிருத்தித்திட்ட ஒத்துழைப்புகளும் கிடைக்கலாம் என ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலைத் தொடர்ந்து அப் பகுதியில் சிறியளவு பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்கும் சர்வதேச சமூகத்தின் அதிகரித்த உதவிகள் கிடைப்பதற்கான வாய்ப்பும் உள்ளன என ஐக்கிய நாடுகளினதும், அரச சார்பற்ற அமைப்புகளினதும் அதிகாரிகள் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான அலுவலகத்தின் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள நிர்வாகம் கிழக்கு மக்கள் தமது பகுதிகளுக்கு மீண்டும் திரும்பித் தாம் இழந்த வாழ்வாதாரத்தை மீண்டும் பெறுவதற்கு உதவக்கூடிய திட்டங்களுக்கு வழிவகுக்கலாம் என இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான அலுவலகத்தின் தலைவர் ஜோலா டொவெல் தெரிவித்துள்ளார்.

நிதி அமைப்புக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும்.

பிராந்தியத்தில் மேலும் ஸ்திரத்தன்மை ஏற்படுவதற்கான ஆரம்பமாகத் மாகாண சபை அமையலாம் என்றும் அந்த அதிகாரி நம்பிக்கைவெளியிட்டார்.

கடந்த 15 வருடங்களில் முதற்றடவையாக ஏற்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படவுள்ள - செயற்படும் - பிராந்திய நிர்வாகக் கட்டமைப்பு காரணமாகப் பாரிய மனிதா பிமானப் பணிகளிலிருந்து அபிவிருத்தித் திட்டங்களை நோக்கிக் கவனம் திரும்பலாம் என்றும் தெரிவித்துள்ள அந்த அதி காரிகள், அதேவேளை இந்த நிர்வாகக் கட்டமைப்பு சர்வதேச நிதி வழங்குநர்களினதும், நிதி அமைப்புகளினதும் நம்பிக்கையைப் பெறவேண்டும் என்றும் குறிப் பிட்டுள்ளனர்.

தேர்தல் முடிந்துவிட்டதால்

தேர்தல் நடைபெற்ற விதம் குறித்த விமர்சனங்கள் காணப்பட்ட போதிலும் அது தற்போது நடைபெற்று முடிந்துவிட்ட விடயம். எதிர்காலத்தில் பாரிய அபிவிருத்தி வங்கிகளும் ஐக்கிய நாடுகள் அமைப்புகளும் இங்கு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முன்வரலாம் என நோர்வே அகதிகள் கவுன்சிலின் இலங்கைக்கான இயக்குநர் ஜோர்ஹென் கிறிஸ்பென்சன் தெரிவித்துள்ளார்.

முன்னரைவிட தற்போது ஓரளவு ஒழுங்கமைப்பும் அதிகளவு பாதுகாப்பும் உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாரிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முதல் பிராந்தியத்தில் உள்ள உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் அனைவரும் தமது பகுதிகளில் மீளக் குடியேற்றப்படுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

# கோப்பாயில் நான்கு வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம், மே.17

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள நான்கு வீதிகள் யாழ். வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் புனரமைக்கப்படவுள்ளன.

கோண்டாவில்- இருபாலைவீதி, அச்சுவேலி- நவக்கிரி வீதி, திருநெல்வேலி- புத்தூர் வீதி, வீரவாணி- வாதரவத்தை வீதி ஆகிய நான்கு வீதிகளுமே செப்பனிடப்படவுள்ளன.

இந்நான்கு வீதிகளும் திணைக்கள நிதி மூலம் செப்பனிடப்படும். இவற்றிற்கான மதிப்பீடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு அனுமதிக்காக திணைக்களத் திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தித்திணைக்கள தொழில் நுட்ப உத்தியோகத்தர் எஸ். பாலகிருஷ்ணன் கோப்பாய் பிரதேச செயலருக்கு தகவல் தெரிவித்துள்ளார். (202-236)

# மீள் எழுச்சித் திட்ட அறிமுகம் கிராம ரீதியாக முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மே 17

'நியாப்' திட்டத்தின் சகோதர திட்டமான "மீள் எழுச்சித் திட்டத்தின்" அறிமுக நிகழ்வு கிராம ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் உள்ள கொக்கணை கிராமம் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் உள்ள திருவாரம், கோயில் குடியிருப்பு கிராமம் ஆகியவற்றில் அண்மையில் இந்த அறிமுக நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் திட்டம் பற்றிய அறிமுக உரையை மீள் எழுச்சித் திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் வே. விசுவலிங்கம் நிகழ்த்தினார்.

இந்தத் திட்டத்தின் அறிமுக நிகழ்வு தெரிவு செய்யப்பட்ட 25 மையக் கிராமங்களில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சமூகத்தினுடைய இயலுமையை கட்டியெழுப்புதலும் திறனை விருத்தி செய்தலும், சமூகத்தை பிரதான பொருளாதார நீரோட்டத்தில் பங்கு கொள்ளச் செய்வதன் மூலம் பொருளாதார உற்பத்தி முயற்சிகளை ஊக்குவித்தல், நிலையான ஜீவனோபாய செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கான உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்தல், மனித முதலீடுகளை விருத்தி செய்தல், பலமான சந்தைப் படுத்தல் முறையை விருத்தி செய்தல் போன்றவை இந்தத் திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது.

முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சமூக ஜீவனோபாயங்களை நடைமுறைப்படுத்துவதோடு கிராமிய அபிவிருத்தி அமைப்பினை தோற்றுவித்து அதனூடாகவே திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என பிரதி திட்டப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (202-249)

# எரிபொருள்களின் விலைகளை மீண்டும் உயர்த்தும் திட்டம் அரசுக்கு இல்லை

## ஊடகத்துறை அமைச்சர் உத்தரவாதம்

கொழும்பு, மே 17

எரிபொருள்களின் விலை உலக சந்தையில் இப்போது உயர்ந்துள்ள போதிலும் இலங்கையில் எரிபொருட்களின் விலையை உயர்த்தும் திட்டம் ஏதும் தற்போது அரசிடமில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

இருப்பினும் எரிபொருள்களின் விலை உயர்வு தொடர்பாக ஆராயவென அமைக்கப்பட்ட பிரதமர் தலைமையிலான அமைச்சரவை உபகுழு இது தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்கும் என்றும் அரசு கூறியது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத் துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

எரிபொருள்களின் விலை உலக சந்தையில் மீண்டும் உயர்ந்துள்ளது. இவ்வாறான ஏனைய சந்தர்ப்பங்களில் எல்லாம் இலங்கை மக்கள் மீது அதிக சுமையை ஏற்றாது நியாயமான முறையில் இலங்கையிலும் விலை உயர்வு செய்யப்பட்டது.

தற்போதும் எரிபொருள்களின் விலை உலக சந்தையில் உயர்ந்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை உயரும்போதெல்லாம் இலங்கையிலும் எரிபொருள்களின் விலையை உயர்த்துவதா, இல்லையா என்பது குறித்து ஆராய பிரதமர் தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய விலையேற்றம் தொடர்பாகவும் இந்தக் குழு எதிர்காலத்தில் முடிவொன்றை எடுக்கும். இருப்பினும், தற்போது எரிபொருள்களின் விலையை அதிகரிக்கும் திட்டம் எதுவும் அரசிட மில்லை - என்றார். (க - 07)



சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் பண்ணையாளர்களின் நலன் கருதி கால் நடை மருந்து விற்பனை நிலையம் ஒன்றை சண்டிலிப்பாய் டச் வீதியில் அண்மையில் திறந்து வைத்துள்ளது. உடுவில் கால்நடை வைத்திய அதிகாரியும், சண்டிலிப்பாய் பதில் கால்நடை வைத்திய அதிகாரியுமான டாக்டர் (செல்வி) சி. பி. மரியதாசன் நாடாவை வெட்டி மருந்தகத்தை திறந்து வைப்பதையும், அருகில் மேற்படி சங்கத் தலைவர் தி. இராஜகுமார் மற்றும் சங்கப்பிரமுகர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: வலி. தென்மேற்கு செய்தியாளர்)

# சாவகச்சேரியில் ஒன்றரை அடியுள்ள வாழைக்குட்டி குலை ஈன்றுள்ளது



யாழ்ப்பாணம், மே.17

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள வேம்படி அம்மன் ஆலய முன்றலில் ஒன்றரை அடி உயரமுள்ள வாழைக்குட்டி குலை ஈன்றுள்ளது.

கடந்த விஜயதசமி தினத்தன்று வாழை நாட்டப்பட்டு வெட்டியும் எரித்தும் அழிக்கப்பட்டது. அதே இடத்தில் அண்மையில் வெளிவந்த வாழைக்குட்டி இது என ஆலய நிர்வாகி கணபதிப்பிள்ளை ஏகாம்பரம் தெரிவித்தார்.

இந்த அதிசய வாழைக்குலையினை பெருமளவு பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (202-207)

# சிறந்த ஆசானாகவும் வழிகாட்டியாகவும் விளங்கும் நல்ல நூல்களைத் தேடிக் கற்க வேண்டும்

## சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் கருத்து

யாழ்ப்பாணம், மே 17

நூல்கள் நமக்கு நல்லதொரு நண்பன் மட்டுமல்ல சிறந்த ஆசானாகவும் வழிகாட்டியாகவும் திகழ்கின்றன. அவற்றைத் தேடிச் சென்று கற்கும் பக்குவம் அனைவருக்கும் ஏற்பட வேண்டும்.

உலக மகாகவி ஷேக்ஸ்பியரின் பிறந்த இறந்த தினங்களாகிய ஏப்ரல் 23 ஆம் திகதியினை உலக புத்தக தினமாக அனுஷ்டிப்பது எழுத்தாளர்களை மட்டுமல்ல வாசகர்களையும் கௌரவிக்கும் செயற்பாடே என கருத முடியும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட காப்பியங்கள், காவியங்கள் இன்றும் மக்கள் மத்தியில் பிரபலமடைந் திருப்பதற்கு வாசகர்கள் மத்தியில் எழுத்தாளர்களின் எழுத்துக்கு இருக்கும் வரவேற்பே காரணமாகும்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி நகர சபைப் பொது நூலகத்தினரால் ஏற்பாடு செய் யப்பட்ட உலக புத்தக தின கருத்தரங்கு நடைபெற்றது. இதில் விருந்தினராகக் கலந்து கொண்ட சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி. சிவநாதன் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் [illegible] தெரிவித்ததாவது:-

ஒரு படைப்பாளியை உருவாக்கும் பாரிய பணி வாசகர்களின் கைகளில் உள்ளது. வாசகர்கள் வழங்கும் ஆதரவில் படைப்பாளிகள் மேலும் மேலும் தமது திறமைகளை நூல் உருவில் வெளிக்கொணர்வர். மாணவர்கள் கொடுக்கும் ஆதரவின் பயனாக இன்று பயன்தரு கல்வி நூல்கள் வெளிவந்தவண்ணமுள்ளன. அதே போன்று பல்வேறு சமய, கலாசார, இலக்கண, விஞ்ஞான, தத்துவ நூல்களும் வெளிவந்த வண்ணமுள்ளன.

எழுத்துருவிலான நூல்களை ஓரிடத்தில் வைத்திருந்து பேணிப்பாதுகாத்து வாசகர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு சிறந்த சேவைகளை சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தினர் வழங்கி வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது ஆயிரக்கணக்கான நூல்களை பொது நூல் நிலையங்கள் இழந்த போதிலும் அவற்றினை ஈடுசெய்யும் வகையில் தேவையான நூல்களை மாணவர்களுக்கு வழங்கி வரும் சாவகச்சேரி நகரசபையின் நிர்வாகத்தினரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஒரு படைப்பாளியின் சிந்தனையின் வெளிப்பாடே நூல்களாக உருவாகின்றன. [illegible] நூல்கள் பல வழிகளில் [illegible]னைப் பெற்று கொள்ள உதவுகின்றன. கல்வி அறிவு உடையவர் மனிதன் ஏனையோர் விலங்குகள் என வள்ளுவரும் 'கல்வி கரையில கற்பவர் நாள் சில' என நாலடியாரும் கூறியுள்ளனர். இவற்றின் கருத்துக்களை நாம் ஆழமாக சிந்தித்து பார்க்க வேண்டும்.

ஓர் இனம் வாழ வேண்டுமாயின் அந்த இனத்தினை பிரதிபலிக்கக் கூடிய நூல்கள் எம்மத்தியில் காணப்படல் வேண்டும். பல நூறு ஆண்டுகளுக்கு பின்னர் எமது இனம் வாழ்ந்ததற்குரிய சின்னங்களாக கற்பாறைகளிலும், களிமண்களிலும், மரங்களிலும், சுவடிகளிலும் எழுதப்பட்டிருப்பதை காண்கிறோம். பல கவிஞர்களால் உருவாக்கப் பட்ட சுவடி எழுத்துக்கள் கூட இன்றும் எம மத்தியில் பிரபல்யமடைந்து காணப்படு கின்றன.

படைப்பாளிகளுக்கு ஆதரவு கொடுப்பதாயின் அவர்களின் ஆக்கங்களை வாசிக்க வேண்டும். நிறைய வாசகர்கள் உருவாகும் போது எழுத்தாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். என்று கூறினார். சாவ கச்சேரி நகரசபைச் செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் தலைமையில் நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ். பிராந்திய தொழிற்சாலை பரி சோதனை பொறியியலாளர் மகேந்திரராஜன், பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாராத சேவாச்சிரம ஆச்சிரம முதல்வர் சித் ரூபானந்தா சுவாமிகள், சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே. சிவராஜலிங்கம் உட்பட பலர்உரையாற்றினர். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# மிஸ்ரா 'ஹட்ரிக்' ; டில்லி 'திறில்' வெற்றி!



புதுடில்லி, மே 17

சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர் பாலாஜியை தொடர்ந்து ஐ.பி.எல். தொடரில் 'ஹட்ரிக்' விக்கெட் வீழ்த்திய இரண்டாவது வீரர் என்ற சாதனையைப் படைத்தார் டில்லி டேர்டெவில்ஸ் அணியின் அமித் மிஸ்ரா. துடுப்பாட்டத்தில் கௌதம் கம்பீர், தவான் ஆகியோர் அரைச்சதம் கடந்து கை கொடுக்க டில்லி டேர்டெவில்ஸ் அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வென்றது.

ஐ.பி.எல். ருவெண்ரி/20 தொடர் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. நேற்றுமுன்தினம் டில்லியில் நடந்த 37ஆவது லீக் போட்டியில் ஷேவாக் தலைமையிலான டில்லி டேர்டெவில்ஸ் அணி, கில்கிறிஸ்ற்றை அணித்தலைவராகக் கொண்ட டெக்கான் சார்ஜர்ஸ் அணியுடன் மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற கில்கிறிஸ்ற் முதலில் களத்தடுப்பைத்தேர்வு செய்தார்.

டெக்கான் சார் ஜர்ஸ் அணியில் இரண்டு மாற்றங்கள் செய்யப்பட்டன.வாஸ் மற்றும் சஞ்சய் பங்கருக்குப் பதிலாக அதிரடி அப்ரிடி மற்றும் சர்வேஷ் களமிறங்கினர்.

டில்லி அணியின் ஆரம்ப வீரர்களாக கம்பீர், ஷேவாக் ஆகியோர் களமிறங்கினர். ஷேவாக் (0) இம்முறை ஏமாற்றம் அளித்தார். அடுத்து வந்ததவான், கம்பீருடன் ஜோடி சேர்ந்தார். ஆர்.பி.சிங் வீசிய நான்காவது ஓவரில் கம்பீர் வரிசையாக இரண்டு சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி என அசத்த, அணிக்கு மொத்தமாக 20 ஓட்டங்கள் கிடைத்தன. அதிரடியாக விளையாடிய இவர் 34ஆவது பந்தில் அரைச்சதத்தைப் பதிவு செய்தார்.

தொடர்ந்து மிரட்டிய கம்பீர், சர்வேஷ் பந்தில் இரண்டு பவுண்டரிகள் அடித்தார். இவர் 58 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஐ.பி.எல். தொடரில் 400 ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற சாதனை படைத்தார். அப்ரிடி ஓவரில் கம்பீர் ஒரு சிக்ஸர், தவான் இரண்டு பவுண்டரிகள் விளாசினர். இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 133 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கம்பீர் பவிலியன் திரும்பினார். இவர் 3 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகளுடன் 48 பந்துகளில் 79 ஓட்டங்களை எடுத்தார்.

மறு முனையில் தவானும் அரைச்சதம் கடந்து அசத்தினார். இவர் 8 பவுண்டரிகளின் உதவியுடன் 68 ஓட்டங்களைக் குவித்தார். டில்லி டேர்டெவில்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 194 ஓட்டங்களை எடுத்தது.

கடின இலக்கைத் துரத்திய டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு அதிரடி ஆரம்பத்தைப் பெற்றுக்கொடுக்க கில்கிறிஸ்ற்(14) தவறினார். அடுத்து வந்த அப்ரிடி, ஆஸிப் பந்தில் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடித்தார். மெக்ராத் வீசிய அடுத்த ஓவரில் கிப்ஸ் 2 சிக்ஸர்கள், அப்ரிடி ஒரு பவுண்டரி அடிக்க, டெக்கான் அணியின் ஓட்டஎண்ணிக்கை மளமளவென உயர்ந்தது.தொடர்ந்து விளாச முயன்ற அப்ரிடி, மிஸ்ரா பந்தில் ஆட்டமிழந்தார். 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் விளாசிய இவர் 14 பந்துகளில் 33 ஓட்டங்களை எடுத்தார். இவரைத் தொடர்ந்து கிப்ஸும் (22) வெளியேற, டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்குச் சிக்கல் ஏற்பட்டது.

அடுத்து வந்த ரோகித் சர்மா, பாட்டியா பந்தில் இரண்டு சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி உட்பட மொத்தம் 19 ஓட்டங்களை எடுத்து நம்பிக்கை தந்தார். தொடர்ந்து விளாசுவார் என எதிர்பார்க்கப்பட்ட அவர் மஹ்ரூப் வீசிய அடுத்த ஓவரில் 'கிளீன் போல்ட்' ஆனார். இவர் 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் உட்பட 18 பந்துகளில் 35 ஓட்டங்களை எடுத்தார். ஸ்ரைரிஸ் 29 ஓட்டங்களை எடுத்தார். மஹ்ரூப் பந்தில் வரிசையாக இரண்டு இமாலய சிக்ஸர்களை அடித்த வேணுகோபால் 34 ஓட்டங்களுடன் (2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள்) மெக்ராத் பந்தில் வெளியேறினார்.

இதையடுத்து கடைசி ஓவரில் 15 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இக்கட்டான சூழ்நிலைக்கு டெக்கான் சார்ஜர்ஸ் தள்ளப்பட்டது. அபாரமாகப் பந்துவீசிய அமித் மிஸ்ரா முதல் இரண்டு பந்துகளில் ரவிதேஜா (9) மற்றும் ஓஜாவை(0) வெளியேற்றி அசத்தினார். இதையடுத்து அவர் 'ஹட்ரிக்' விக்கெட் வீழ்த்துவார் என எதிர்பார்க்கப்பட்டது. ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்த இவர் மூன்றாவது பந்தில் ஆர்.பி.சிங்கை வெளியேற்றி சாதித்தார். டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 182 ஓட்டங்களை எடுத்து 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.




# இத்தாலி பகிரங்க டெனிஸ் காலிறுதியில் ஷரபோவா

ரோம், மே 17

இத்தாலி பகிரங்க டெனிஸ் போட்டியின் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார் மரியா ஷரபோவா.

டெனிஸ் உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, நேற்றுமுன்தினம் நடந்த மூன்றாம் சுற்று ஆட்டத்தில் டென்மார்க் வீராங்கனையான கரோலினி வொஸ்னியாசிக்கை எதிர்த்தாடினார். இந்த ஆட்டத்தின் முதல் செற்றில் சிறப்பாக ஆடிய ஷரபோவா, அதனை 6:4 எனும் கணக்கில் இலகுவாகக் கைப்பற்றினார். இரண்டாவது செற்றைக் கடுமையான போராட்டத்தின் பின்னர் 7:6 எனும் கணக்கில் வென்றெடுத்த அவர் காலிறுதிக்குள் ஜோராக நுழைந்தார்.

மற்றைய மூன்றாம் சுற்று ஆட்டங்களில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 6:4, 6:3 எனும் நேர் செற்கணக்குகளில் இத்தாலிய வீராங்கனையான சாறா இரானியை வீழ்த்தியும், வீனஸ் வில்லியம்ஸ் 7:5, 6:2 எனும் நேர் செற்கணக்குகளில் ரஷ்யாவின் வேரா சோவனரீவாவை வீழ்த்தியும் காலிறுதிக்கு முன்னேறினர்.


சேர்பியாவின் ஜெலீனா ஜனகோவிக், ரஷ்யாவின் மரியா கிரிலிங்கோவை 6:1, 6:1 எனும் நேர் செற்கணக்குகளில் வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதிபெற்றார்.

முதல் டெஸ்ட் போட்டி

# இங்கிலாந்து வேகங்கள் அசத்தல்; மக்கியூலத்தின் அதிரடியில் சரிவிலிருந்து மீண்டது நியூஸிலாந்து

லண்டன், மே 17

லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வேகங்களைச் சமாளிக்க திணறிவரும் நியூஸிலாந்து அணி ஓட்டங்களைச் சேர்க்கப் போராடி வருகின்றது. நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற முதல்நாள் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 208 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஒரு முனையில் விக்கெட்டுகள் இழக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும் மறுமுனையில் அதிரடியாக ஆடிய பிரண்டன் மக்கியூலம் 97 பந்துகளில் 97 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழந்து 3 ஓட்டங்களால் சதமடிக்கும் வாய்ப்பை இழந்தார்.



இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் நேற்றுமுன்தினம் லண்டனில் உள்ள லோட்ஸ் மைதானத்தில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோகன் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார். மழையின் காரணமாக ஆட்டம் சுமார் 3 மணி நேரம் தாமதமாகவே தொடங்கியது. நியூஸிலாந்து அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சியளித்தார் ஜேம்ஸ் அன்டர்ஸன். இவரது வேகத்தில் ஆரம்ப வீரர்களான ஜிம்மி கௌவ்(7), ரெட் மொன்ட் (0) ஆகியோர் விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.

தொடர்ந்து ஸ்ருவேட் பிராட்டின் வேகத்தில் ரோஸ் ரெய்லர் 19 ஓட்டங்களுடனும், ஜேம்ஸ் மார்ஷல் 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அடுத்துக் களம்புகுந்த பிளைன் 9 ஓட்டங்களைப் பெற்றிருந்போது அன்டர்ஸனின் பந்துவீச்சில் 'போல்ட்' ஆனார். 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 105 ஓட்டங்களைப் பெற்று நியூஸிலாந்து அணி தடுமாறியது.

இந்நிலையில் 6ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த பிரண்டன் மக்கியூலம் - ஜேக்கப் ஓரம் ஆகியோர் அணியைச் சரிவிலிருந்து மீட்டெடுக்கப் போராடினர். ஒரு முனையில் மக்கியூலம் அதிரடியாக ஆட, மறுமுனையில் நிதானப் போக்கைக் கடைப்பிடித்தார் ஓரம். சிக்ஸர்கள், பவுண்டரிகளாக விளாசிய மக்கியூலம் 97 பந்துகளில் 97 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மொன்றி பனிஷரின் சுழலில் 'போல்ட்' ஆனார். இந்த ஜோடி 6ஆவது விக்கெட்டுக்காக 99 ஓட்டங்களைச் சேர்த்தது.

நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற முதல்நாள் ஆட்டநேர முடிவில் நியூஸிலாந்து அணி 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 208 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஜேக்கப் ஓரம் 23 ஓட்டங்களுடனும், டானியல் வெட்ரோறி 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெறவிருந்தது.

# ஜெய்ப்பூர் குண்டுவெடிப்பை அடுத்து நாடு திரும்புகின்றனர் வோர்ன், சிமித்?

## ஐ.பி.எல். தொடருக்கு புதிய சிக்கல்

புதுடில்லி, மே 17

ஜெய்ப்பூர் குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து பாதுகாப்பு காரணமாக ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவர் ஷேன் வோர்ன் மற்றும் கிரேம் சிமித் ஆகியோர் தங்களது தாயகம் திரும்பப் போகின்றார்கள் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. இதையடுத்து ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் பெங்களூரு றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணிகள் ஜெய்ப்பூரில் இன்று மோதும் போட்டி நடக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த 13ஆம் திகதி ஜெய்ப்பூரில் எட்டு இடங்களில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன. இதில் 80இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். இதையடுத்து ஜெய்ப்பூர் நகரை மையமாக கொண்ட ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில் விளையாடிவரும் அன்னிய வீரர்கள் கலக்கமடைந்துள்ளனர். பீதியில் இவர்கள் போட்டிகளை ரத்துச் செய்துவிட்டு நாடு திரும்பத் தயாராகி வருகின்றனர் என்று செய்திகள் வெளியாகியுள் ளன.

இது குறித்து ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் முகாமையாளரான ஆஸ்திரேலியாவின் டேரன் பெரி அந்நாட்டிலிருந்து வெளி வரும் பத்திரிகைக்கு ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

விமானம் மூலமாக ஜெய்ப்பூரிலிருந்து விரைவில் வெளியேறிவிடுவது நல்லது என நினைக்கிறேன். இங்குள்ள சூழ்நிலை கள் பாதுகாப்பானதாக இல்லை. கிரிக்கெட் என் வாழ்க்கைக்கு நல்லதுதான். ஆனால், மெல்போர்னில் எனக்கு ஒரு மனைவியும், மூன்று குழந்தைகளும் இருப்பதை மறந்துவிட முடியாது. நான் இல்லாத உலகை அவர்களாலும் நினைத்துப் பார்க்க முடியாது. பல உயிர்களை பலி கொண்ட இச்சம்பவம் குறித்து வோர்னும் தனது அச்சத்தை என்னிடம் தெரிவித்தார்.

இங்கு வருவதற்கு ஒரு நாள் முன்னதாக குண்டுவெடிப்பு நடந்திருந்தால், நாங்கள் வந்திருப்போமா என்பதே சந்தேகமாகிவிடும். இரண்டு நாட்களுக்கு முன்புதான் குண்டுவெடிப்பு நடந்த அதே இடத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். அதை தற்போது நினைத்தாலும் மிகவும் பயங்கரமாக இருக்கிறது. நாங்கள் தங்கியிருக்கும் ஹோட்டலில் இருந்து 2 கிலோமீற்றர் தூரத்தில்தான் இது நடந்துள்ளது. - இவ்வாறு பெரி தெரிவித்தார்.

இதேவேளை, வீரர்களுக்கு சிறப்பான பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது என ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் நிர்வாக அதிகாரி பிரேசர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

"பாதுகாப்பு மிக முக்கியம். ஐ.பி.எல். அதிகாரிகள் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொடுத்துள்ளனர். மைதானத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மோப்ப நாய்கள் மற்றும் குண்டுகளை அகற்றும் குழுக்கள் தீவிர பணியில் உள்ளனர். அசம்பாவிதங்கள் ஏதும் நடக்காது என்பதில் உறுதியாக இருக்கிறோம்." - என்றார்.

இந்நிலையில் வோர்ன், ஷேன் வட்ஸன் மற்றும் தெ[illegible] ஆகியோர் [illegible]



வெளியான செய்தியை ஐ.பி.எல். தலைவர் லலித் மோடி மறுத்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

"பெங்களூர் அணிக்கு எதிரான நாளைய (இன்றைய) போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்காக விளையாடும் அனைத்து ஆஸ்திரேலிய வீரர்களும் பங்கேற்பார்கள். குண்டுவெடிப்புக்கு பின் போட்டியில் விளையாட வீரர்கள் தயக்கம் காட்டினார்கள். சிறிது பதற்றமடைந்தாலும் தற்போது பங்கேற்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

பாதுகாப்பு ஏற்பாடுகளை குறித்து வெளிப்படையாகக் கூறமுடியாது. போட்டியை காண வருவோர் பைகள், லைட்டர்கள், தீப்பெட்டிகள், போத்தல்கள் ஆகியவற்றை கொண்டு வரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வீரர்கள் இருக்கும் பகுதிகளில் தடுப்பு எல்லைகள் அமைக்கப்படும். அவர்கள் அருகில் செல்ல [illegible] அனுமதி வழங்கப்படாது. பாதுகாப்பு நடவடிக்கைகளில் வீரர்கள் முழுத் திருப்தி அடைந்துள்ளனர்." - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்

## சுகாதார அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் உறுதி கூறுகின்றார்

வடமராட்சி,மே17

யாழ்.குடாநாட்டு வைத்தியசாலைகளின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சுகாதார அமைச்சின் பிரதிச் சுகாதாரப் பணிப்பாளரும் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார ஆலோசகருமான வைத்திய கலாநிதி வி.ஜெகநாதன் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தது. இக்குழுவில் பிரதி சுகாதாரப் பணிப்பாளரும் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார ஆலோசகருமான வைத்திய கலாநிதி வி.ஜெகநாதன், சுகாதாரக் கல்வி பிரதம ஆலோசகர் வைத்திய கலாநிதி இந்திரஜித், தாதியர் பயிற்சிக்கான கல்வி ஆலோசகர் திருமதி சமரநாயக்கா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இக்குழுவினர் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெறத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கிய பின்னர் யாழ்.செயலகத்தில் யாழ். அரச அதிபர் கே.கணேஷை சந்தித்து குடாநாட்டு சுகாதார நிலைவரம், எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவைகள் என்பன குறித்து கேட்டறிந்து கொண்டனர். இச்சந்திப்பின் போது யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனும் உடன் இருந்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் சகிதம் இக்குழுவினர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்து வைத்தியசாலையைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

பின்னர் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இவ்வைத்தியசாலையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை மற்றும் தேவைகள் தொடர்பாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் விளக்கமளித்தார்.

பிரதி சுகாதாரப் பணிப்பாளரும் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார ஆலோசகருமான வைத்திய கலாநிதி வி.ஜெகநாதன் கருத்துத் தெரிவிக்கையில்:

யாழ்.குடாநாட்டு வைத்தியசாலைகளின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் அவற்றின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அந்தவகையில் இவ்வைத்தியசாலை குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றமடைந்துள்ளது. 60 தாதியர்கள் பணியாற்றவேண்டிய இடத்தில் 28 தாதியர்களே பணியாற்றுவதாக இங்கு தெரிவிக்கப்பட்டது. விரைவில் பயிற்சியை முடித்து வெளியேறும் தாதியர்களில் 5 பேரை இங்கு நியமிக்க முதலில் நடவடிக்கை எடுக்கப்படும். தொடர்ந்தும் அவ்வாறாக பயிற்சியை முடித்து வெளியேறுவோருக்கு இங்கு நியமனம் வழங்கி பற்றாக்குறை படிப்படியாக நீக்கப்படும். வைத்தியசாலைகளின் அபிவிருத்தி மற்றும் தேவைகளை நிறைவேற்ற எம்மாலியன்ற ஒத்துழைப்பு வழங்கப்படும்.

வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பொறுப்பேற்ற பின்னர் குடாநாட்டு வைத்தியசாலைகளும் வைத்திய சேவைகள் மற்றும் சுகாதார நடவடிக்கைகள் முன்னேற்றமடைந்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது - என்றார்.

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையையும் இக்குழுவினர் சென்று பார்வையிட்டனர். (202-236)

## தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய் கிளை புதிய இடத்தில் இயங்கும்

நவாலி,மே17

தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய் கிளை தமது சேவைகளை விரிவுபடுத்துவதற்காகத் தற்போதைய இடத்திலிருந்து சமீபமாகவுள்ள சுந்தர்சன் கட்டடத் தொகுதிக்கு இடம்மாறி இயங்கவுள்ளது.

புதிய இடத்தில் செயற்பாடுகள் யாவும் எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியிலிருந்து ஆரம்பமாகுமென்று அதன் முகாமையாளர் தெரிவித்தார். (202-100)

## மானிப்பாய் சங்கக் கிளைகளில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு

நவாலி,மே17

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மா, சீனி, மண்ணெண்ணெய் போன்ற பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பாவனையாளர்கள் சில நாள்களாக இப்பொருள்களை தனியார் கடைகளில் அதிக விலைக்கு பெற்றுச் செல்கின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் உடன் இப்பொருள்களைத் தருவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பாவனையாளர்கள் கேட்கின்றனர். (202-100)

## சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ் கடலுக்குள் பாய்ந்தது!

வேலணை,மே17

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த 782ஆம் வழி இலக்க மினிபஸ் வலந்தலைப் பாலத்தில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து கடலில் பாய்ந்தது.

குறித்த பஸ்ஸின் சுழற்சிக் கட்டுப்பாட்டு றொட் உடைந்ததால் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பஸ் கடலில் பாய்ந்தது. இந்நிலையில் சாரதி வேகத்தடுப்பை பிரயோகித்து பஸ்ஸை நிறுத்தியதால் பஸ்ஸின் முன்சக்கரம் கடலினுள் சென்றநிலையில் பஸ் நிறுத்தப்பட்டது.

பல சிறுவர்களுடன் 40இற்கு மேற்பட்ட பயணிகளுடன் வந்துகொண்டிருந்த பஸ் கடலில் விழுந்திருந்தால் பெரும் அனர்த்தம் நேர்ந்திருக்கும். எனினும் பஸ்ஸின் சாரதி சமயோசிதமாகச் செயற்பட்டு பஸ்ஸை நிறுத்தியதால் அனர்த்தம் தவிர்க்கப்பட்டது. (202-267)

## உலக உணவுத்திட்ட நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம்,மே17

உலக உணவுத் திட்டத்தினால் நலிவுற்ற குடும்பங்களுக்கான உணவு வழங்கலின் கீழ் மே மாதத்தின் மூன்று வாரங்களுக்கான உணவு விநியோகம் தொடர்பான வழங்கற் கட்டளை மாவட்டச் செயலகத்தினால் நேற்று முதல் சகல ப.நோ.கூ. சங்கங்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

ப.நோ.கூ. சங்கங்கள் இன்று வழங்கற் கட்டளையை மாவட்டச் செயலகத்திலிருந்து பெற்று உலக உணவுத்திட்ட கோப்பாய் களஞ்சியத்திலிருந்து பொருள்களைப் பெற்று விநியோகத்தினை எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பிக்குமாறு செயலக திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.

மேற்படி நலிந்த பிரிவினருக்கான உலக உணவுத் திட்ட ஏப்ரல் மாத நிவாரண உணவுப் பொருள்கள் ஏற்கனவே அறிவித்ததன் பிரகாரம் இம்மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் பயனாளிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு திட்டப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் மே மாத நிவாரணத்தினையும் பயனாளிகள் காலம் தாழ்த்தாது எதிர்வரும் 23ஆம் திகதி உணவுப் பொருள்களை ப.நோ.கூ. சங்கங்களிலிருந்து பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (1)



இணுவில் இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிடுவதையும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த உபகரணங்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்: நேசன்)*




## கல்விக் கௌரவிப்பு விழா

பருத்தித்துறை,மே17

பருத்தித்துறை, வியாபாரிமூலை கலைமணி சனசமூக நிலையத்தின் கல்விக் கௌரவிப்பு விழா நாளை வியாபாரிமூலை நாச்சிமார் ஆலய முன்றிலில் கே.மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிலே யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (202-218)

## செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,மே17

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் விஞ்ஞான பாடம் கற்கும் மாணவர்களுக்கான செயலமர்வுகளை நடத்தவுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை பௌதிகவியல் கற்கும் மாணவர்களுக்கும் மறுநாள் வியாழக்கிழமை உயிரியல் கற்கும் மாணவர்களுக்கும் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன. (202)


## கோழித் திருடர்கள் அகப்பட்டனர்

கொடிகாமம், பாலாவிப் பகுதியில் கோழிகள் திருடிய மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கூட்டுக்குள் அடைக்கப்பட்டிருந்த எட்டுக் கோழிகள் திருட்டுப்போயுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து இந்த மூவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குடியிருப்பு இல்லாத காணியில் தேங்காய் பிடுங்கிய திருடனும் கொடிகாமம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளான். பொதுமக்கள் தந்த தகவலையடுத்து ஸ்தலத்திற்குச் சென்ற பொலிஸார் திருடனைக் கைதுசெய்துள்ளனர்.

திருடர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)




மல்லாகம், நீலியம்பனை முதலி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 9ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (202)

★ ★ ★

சுழிபுரம்,மே17

பனிப்புலம் காலையடி முருகன் வேலவர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. தற்போது ஆலய திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. (202-28)

★ ★ ★

கட்டைவேலி,மே17

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மகாகும்பாபிஷேக தின 1008 சங்காபிஷேகமும், பாற்குட பவனியும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

முற்பகல் குமிழடி விநாயகர் ஆலயத்திலிருந்து பாற்குட பவனியும் தொடர்ந்து 1008 சங்காபிஷேகமும், அன்னதானமும், மாலையில் அம்பாள் திருவூஞ்சல், மணவாளக் கோலமும் இடம்பெற்று சுவாமி வீதி உலா வருவதுடன் நிறைவுறும். (202-290)

★ ★ ★

கட்டைவேலி,மே17

துன்னாலை வடக்கு அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்தத்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளன. (202-290)

★ ★ ★

மாவிட்டபுரம், வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் வைகாசி மாத விசேட அபிசேகம், பொங்கல் குளிர்த்தி ஆகியவை நாளை மறுதினம் நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் காலை 9மணிமுதல் மாலை 4 மணிவரை ஆலயத்திற்குச் செல்ல படையினர் அனுமதி அளித்துள்ளனர்.

உற்சவத்தில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் அன்றைய தினம் காலை 9 மணிக்கு முன் தெல்லிப்பழை தடைமுகாமிற்கு வருகை தருமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (202)

★ ★ ★

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து நடைபெறும் உற்சவத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே17

உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தேர்த்திருவிழா நாளையும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (205)

★ ★ ★

வடமராட்சி,மே17

கரணவாய் வடக்கு, சாத்தானையம்பதி பத்திரகாளி சமேத வீரபத்திரர் கோயில் மணவாளக்கோல அஷ்டோத்தர சத சங்காபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (202-236)

★ ★ ★

வடமராட்சி,மே17

பருத்தித்துறை ஆத்தியடிப்பிள்ளையார் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலக புத்தக தினத்தையொட்டி சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூல்நிலையத்தில் புத்தகக் கண்காட்சியும் கரத்தரங்கும் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதேசசபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் உரையாற்றுவதையும் அருகில் நூலகர் இ.தர்மலிங்கம், மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியம், சரசாலை சரஸ்வதி வித்தியாலய அதிபர் திருமதி ஜெ.தேவேஸ்வரன், ஆசிரியர் சுமுகலிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் புத்தகக் கண்காட்சியைப் பொதுமக்களும் மாணவர்களும் பார்வையிடுவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். *(படங்கள்: தென்னவன்)*

## மூன்றாவது பிறந்ததின வாழ்த்து




அம்பாள் அகம் சரசாலை மத்தி யைச் சேர்ந்த திரு.திருமதி காந்திகுமார் ஞானகௌரி தம்பதியரின் அருந்தவப் புதல்வி

**செல்வி கா.மாதங்கி**

இன்று (17.05.2008) சனிக்கிழமை தனது 3 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, மாமா குடும்பம், பெரியப்பா, பெரியம்மா, சஞ்சி அக்கா, பபி அண்ணா ஆகியோர் சரசாலை இராமாவில் பிள்ளையாரினதும் மட்டுவில் புதரங்கேணி மாகாளி அம்பாளின் அருள்பெற்று வாழவாழ்த்துகிறார்கள். (74022)

அம்பாள், அகம்.
சரசாலை மத்தி
சாவகச்சேரி.

சி.இராசையா
குடும்பம்.

### விபத்தில் ஒருவர் காயம்

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டி தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நுணாவிலில் இடம்பெற்றது.

மீசாலையைச் சேர்ந்த கே.அருளானந்தம் (வயது 27) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (202-207)

## தென்மராட்சி முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 17

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு வழங்குவது தொடர்பாக போரூட் நிறுவனப் பிரதிநிதிகள்இக் கலந்தரையாடலில் உரையாற்றவுள்ளனர். அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்து கொள் ளுமாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம. வசந்தகுமார் கேட்டுள்ளார். (202-207)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



*மலர்வு: 30.06.1971*

*உதிர்வு: 17.05.2000*

*அமரர்*

**சுப்பிரமணியம் சரவணபவானந்தன்**

பாசத்தின் வித்தாய் பண்பின் உறைவிடமாய்
பார்போற்றும் உத்தமனாய் வாழ்ந்தாய்
பலகாலம் சென்றாலும் பாசத்தின் திருஉருவம் உன்னை
எம் உயிர் உள்ளவரை மறவோம்.

*அப்பா, அம்மா,*
*அண்ணாமார், தம்பி*
*அண்ணி, பிள்ளைகள்.*

*கைதடி மேற்கு,*
*கைதடி.* (74179)

**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

**ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்**

***Diploma in Hardware Engineering***
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

***Diploma in Video Editing***
முன்னணி **Video Mixing Software** களுடன்
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

***Diploma in Graphic Designing***
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

*Diploma in Quick Books*
பிரபல கணனிக்கணக்கியல் மென்பொருள்
Course Fee : 2000/=

**வகுப்புக்கள் ஆரம்பம் :19/05/2008 09.00AM**

***மணமகன் தேவை:*** யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1970 ஆம் ஆண்டு பிறந்த மணமகளுக்கும் 1975, 1980 ஆண்டு பிறந்த மணமகளுக்கும் தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.0775982979

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறெயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
**19, முருகேசர் லேன், நல்லூர்.**

### விற்பனைக்கு

புறொயிலர் 3kgக்கு மேற்பட்டது உயிருடன் 1kg 350/=, சுத்தம் செய்தது 500/= மற்றும் ஊர்ச்சேவல், கல்பேட் என்பன விற்பனைக்குண்டு.

**தாசன்பாம்,**
**158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.** (74128)

### காணி விற்பனைக்கு


மீசாலை, கந்தசாமிகோயில் வீதியில் 11பரப்பு மேட்டுக்காணி விற்பனைக் குண்டு. பிரதான வீதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் உள்ளது.

தொடர்பு:
**பாலதேவி சின்னையா,**
சேர்ச்லேன், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (ம/552871)

## நான்கு ஆண்டுகளும் ஆகிறதோ... ஒளிமுகம் மறைந்து

தாயின் மடியில்
04
08
1981

மண்ணன்னையின் மடியில்
17
05
2004



ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனும் [illegible] 2ஆம் வருட பொறியியல்பீட மாணவனுமாகிய

செல்வன் **மரியரட்ணம் குணரட்ணம்** (குணம்)

பலநெஞ்சங்கள் வாழ்ந்த பொறியியற்பீடம் சென்றாயே
05.03.2008 அன்று நிகழ்ந்த பட்டமளிப்பு
விழாவிலே உன்னுடைய இடம்வெற்றிடமாக இருந்தது
எம் கனவுகளும் பொய்யாகிப் போயினவே....
குணம்.... மறக்கமுடியவில்லையடா.....

மெல்லென நடப்பாயே சில்லெனச் சிரிப்பாயே
சிந்தித்துக் கதைப்பாயே.....
மறக்காது உதவுவாயே மறைக்காது பேசுவாயே
உறவு சொல்லி அணைப்பாயே...
குணம்....... மறக்க முடியவில்லையடா.....


இசைமழையால் நனைந்தாயே நவரச நாயகனானாயே
களிப்புடனே இருந்தாயே.....
காலனவன் வந்தானோ இரயில் வடிவில்
பாடித்திரிந்த நம்வீட்டில் படமாகிப் போனாயோ
குணம்...... மறக்க முடியவில்லையடா.....

*நாம் வாழும் வரை எம்முள்ளே நீயும் வாழ்வாய்*

உன் நினைவில் வாழும்:
தந்தை, தாய், சகோதரி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

நிரந்தர முகவரி: 6ஆம் வட்டாரம், மயிலிட்டி.
தற்காலிக முகவரி: தும்பளை, பருத்தித்துறை. (74178)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **சின்னத்துரை முரளி**

*(சுவிஸ்)*

(மூளாய் மத்தி, மூளாய்)

அன்பின் பிறப்பிடமான எனதருமைக் கணவரே!
பாசத்தின் உறைவிடமான சகோதரரே!
பண்பின் திருவுருவான எமது மைத்துனரே!
மாண்புமிக்க எங்கள் மருமகனே!
அரவணைப்பும் இன்முகமும் நிறைந்த எங்கள் பெரியப்பாவே!
சிறப்புமிக்க எங்கள் சித்தப்பாவே!
ஆருயிர் நண்பனே உடலளவில் நீங்கள்
எங்களை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ!
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் பிரார்த்திப்போம்.

**குடும்பத்தினர்.**

[illegible]
மூளாய் மத்தி, மூளாய். (74188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்கள், ஆசிரியர்கள் சம்பளப் பிரச்சினை; தீர்வுகாண ஒரு மாத கால அவகாசம் வழங்கி தொழிற்சங்கப் போராட்டம் நடத்த முஸ்தீபு

அச்சுவேலி,மே17

ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு மாத காலம் அவகாசம் வழங்கி தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரம், ஜி.சீ.ஈ உயர் தரப் பரீட்சைகள் உட்பட பொதுப் பரீட்சைகளின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஆசிரியர்கள் ஈடுபடுவதில்லை. அந்தவகையில் மதிப்பீட்டுப் பணிகளுக்கும் விண்ணப்பம் செய்வதில்லை. வகுப்பறைக் கற்பித்தல் பணிகளுக்கு மேலாக எந்தப் பணியிலும் பாடசாலையில் மேற்கொள்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பில் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டிருப்பதோடு இது தொடர்பாக கல்வி அமைச்சிற்கும் ஜனாதிபதிக்கும் தேசிய சம்பள நிர்ணய பதவி ஆளணி ஆணைக்குழுவுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

பத்திரிகையாளர் மாநாடு கொழும்பு கோட்டையில் உள்ள குருகெதர (ஆசிரியர் இல்லம்) மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த வியாழக்கிழமை முற்பகல் நடைபெற்ற ஆசிரியர் தொழிற்சங்கங்களின் ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை முஸ்லிம் ஆசிரியர் சங்கம், இலங்கை தரம் பெற்ற அதிபர்கள் சங்கம், இலங்கை அதிபர்கள் சங்கம், ஜாதிக குருசேவ சங்கம் உட்பட இலங்கையில் உள்ள பத்துக்கு மேற்பட்ட ஆசிரியர் சங்கங்களின் முன்னணிப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

பத்திரிகையாளர் சந்திப்பு தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசேப் ஸ்ரானில் தகவல் தருகையில்-

ஆசிரியர் - அதிபர்களின் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு விடயத்தில் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மிகவும் முனைப்போடும் விழிப்புணர்வோடும் களத்தில் இறங்கியுள்ளன.

ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பள பிரச்சினை தொடர்பாக 2007ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் பொருத்தமான தீர்வு காணப்படும் என 2007ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. எந்தவிதமான தீர்வும் முன்வைக்கப்படவில்லை. 10 வருடங்களாக இழுத்தடிக்கப்படுகின்றது.

ஆசிரியர், அதிபர்கள் சம்பள முரண்பாட்டுக்குக்கான தீர்வு தொடர்பாக கடந்த மார்ச் 4ஆம் திகதி தேசிய சம்பள நிர்ணய பதவி ஆளணி ஆணைக்குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்டு ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பதில் கோரப்பட்டது. மார்ச் 17ஆம் திகதி ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஒருமித்த குரலில் பதிலைச் சமர்ப்பித்தனர்.

கடந்த வாரம் ஆசிரியர் தொழிற் சங்கங்களுக்கும் தேசிய சம்பள நிர்ணய பதவி ஆளணி ஆணைக்குழுவுடன் நடைபெற்ற சந்திப்பில் அரசாங்கமும் தேசிய சம்பள நிர்ணய ஆணைக்குழுவும் இணைந்த நிலையில் காலங்கடத்துவதையும் சம்பளப் பிரச்சினையை இழுத்தடிப்பதையும் தெளிவாக அவதானிக்க முடிந்தது. இந்த நிலையில் தேசிய சம்பள நிர்ணய பதவி ஆணைக் குழுவில் செயற்பாடுகளில் பிரச்சினை தீர்த்துவைப்பதற்கான திட்டங்கள் இல்லை என்பதை அடுத்தே ஆசிரியர் தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளாமல் வெளியேறின.

அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு ஆசிரியர் தொழிற்சங்கங்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக முன்வைக்கப்படவேண்டும். இல்லாவிடில் தொழிற்சங்கப் போராட்டம் மிகத் தீவிரமான முறையில் முன்னெடுக்கப்படும் - என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (202-11)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே17

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை தொடக்கம் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான போட்டி இன்றும் நாளையும் பெண்களுக்கான போட்டி எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளிலும் காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளன.

பங்குபற்றும் அணியினரை காலை 8 மணிக்கு முன் மைதானத்திற்கு வருகை தருமாறு யாழ்.மாவட்ட விளையாட்டுச் செயலாளர் க.குமாரசுவாமி கேட்டுள்ளார். (202)

* * *

குருநகர்,மே17

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஏழு வீரர்கள் கலந்துகொள்ளும் 'நொக்கவுட்' முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டிகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

* *பிற்பகல் 3 மணி* - குருநகர் சென். றோக்ஸ் 'ஏ' அணி எதிர் நாவாந்துறை சென். மேரிஸ் 'பி' அணி.
* *பிற்பகல் 4 மணி* - நாவாந்துறை சென்.நீக்கிலஸ் 'ஏ' அணி எதிர் அரியாலை வி.க. (1-51)

* * *

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதே செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார். (1)



வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின பொது நூலகத்தினர் உலக புத்தக தினத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையில் புத்தகக் கண்காட்சியை நடத்தினர். பாடசாலை மாணவிகள் ஆர்வத்துடன் புத்தகங்களைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். *(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

## வாசகர் திருமுகம்

### போக்குவரத்து சீரற்ற நிலையில் மாற்று வழிகளில் சம்பளத்தை வழங்கமுடியாதா?

யாழ்.குடாநாட்டில் உள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் சாதாரண ஆசிரியராகிய நான் தற்போது வடபகுதிக்கு அப்பால் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வித்துறை தொடர்பான பட்டப்பின் கற்கைநெறியொன்றைப் பயின்று வருகின்றேன்.

கல்வியமைச்சின் செயலாளர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ள கடிதத்தின் மூலம் எனக்கு குறிப்பிட்ட காலத்துக்கு முழுநேரச் சம்பளத்துடனான கற்கை விடுமுறை அனுமதிக்கப்பட்டுள்ளது. இக்கடிதத்தின் பிரதிகள் கல்வியமைச்சினால் குறிப்பிட்ட வலயக் கல்விப்பணிப்பாளர், கணக்காளர் ஆகியோருக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் முதல் இரு மாதங்களுக்கும் D-படிவம் (D - Form ) மூலம் எனது சம்பளத்தை வழங்கிய கல்வி அலுவலகம் கடந்த பல மாதங்களாக சம்பளத்தை வழங்காது இடைநிறுத்தியுள்ளது. காரணம் சுற்றறிக்கையின்படி இரு தடவைக்குக் கூடுதலாக D - படிவம் மூலம் சம்பளம் வழங்கமுடியாது என்றும் எனவே ஒவ்வொரு மாதமும் யாழ்.மாவட்டத்துக்கு வந்து குறிப்பிட்ட பாடசாலையில் சம்பளத்தை நேடியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட கல்வி அலுவலகத்தின் பொறுப்பான உத்தியோத்தரினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

குடாநாட்டுக்கான போக்குவரத்து சீரற்ற தற்போதைய நிலையில் ஒவ்வொரு மாதமும் சம்பளத்துக்காக யாழ்ப்பாணம் வந்துபோவது கடினமான நிலையில் பல மாதங்களாக எனது சம்பளத்தைப் பெறமுடியவில்லை.

ஊழியர் ஒருவர் மாதச் சம்பளத்தைப் பெறுவது வங்கியில் நிலையான வைப்பில் இடு வதற்காக இல்லை என்பது யாவரும் அறிந்த விடயம்.

ஆகவே குடாநாட்டுக்கான தற்போதைய போக்குவரத்துச் சீரற்ற நிலைமையைக் கருத்திற்கொண்டு D-படிவம் தவிர்ந்த வங்கிச் சேவைகள் போன்ற பொருத்தமான மாற்று வழிமுறைகளைக் கையாண்டு எனது மாதச் சம்பளத்தைப் பெறுவதற்கு உதவுமாறு பொறுப்பானவர்களைப் பலமுறை கடிதங்கள் மூலம் கேட்டுக்கொண்டும் இதுவரை பலன் ஏதும் கிடைக்கவில்லை.

குறிப்பிட்ட கடிதங்கள் வலயக் கல்விப்பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டனவா? அல்லது நேரடியாக கல்வி அலுவலக குப்பைக் கூடைக்குள் சேர்க்கப்பட்டனவா என்பது எல்லாம் வல்ல அந்த இறைவனுக்குத்தான் வெளிச்சம்.

*பேராதனை.* பாதிப்புக்குள்ளான ஓர் ஆசிரியர்.

### நீர்ப்பாசன திணைக்களத்துக்கென நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலைமை

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் நீர்ப்பாசனத் திணைக்களக் காரியாலயத்திற்கென நிரந்தரமான ஒரு கட்டடம் இல்லை. நீர்ப்பாசனத் திணைக்களக் காரியாலயம் அமைப்பதற்காக யாழ்.பண்ணைப் பகுதியில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுக் கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு ஏற்ற நிலையில் எல்லைகள் பிரிக்கப்பட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தாரால் பராமரிக்கப்படுகின்றது. காரியாலயக் கட்டடம் அமைப்பதற்கான நிதி கோரும் முகமாக NECORD போன்ற நிறுவனங்களிடம் கட்டடத்துக்கான வரைபடம், முப்பரிமாண நோக்கு போன்றன சமர்ப்பிக்கப்பட்டும் நிதி கிடைக்கவில்லை என அறிகிறோம்.

இன்றைய நிலையில் , யாழ்.மாவட்டக் குடிதண்ணீரில் உப்புத் தன்மை அதிகரித்து வருவதாகப் பல பெரியவர்கள் ஆராய்ந்து கூறிவருகிறார்கள். சிறந்த முறையில் உவர் நீர்த் தடுப்பணைகள் பேணப்படாமையும் இதற்கொரு காரணமாகும். தற்போது நீர்ப்பாசனத் திணைக்களத்தால் உவர்நீர்த் தடுப்பணைகளமைத்து சீர்திருத்தும் பணியும் இன்னும் சில மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.அதுமட்டுமல்லாமல், தொண்டமானாறு ஏரித் திட்டம் (Thondamanaru Barrage), வழுக்கையாறுத் திட்டம் போன்ற பல மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

தற்போதைய நாட்டுச் சூழலில் வெளி மாவட்டங்களில் பணிபுரியும் பணியாளர்கள் பலரும் யாழ்.மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களக் காரியாலயத்தில் தற்காலிகமாகப் பணிபுரியும் நிலையில் கோவில் வீதியில் அமைந்துள்ள சிறியமனையில் செயற்படும் தற்காலிகக் காரியாலயத்தில் பெரும் இடப்பற்றாக்குறை நிலவுகின்றது. உவர்நீர்த் தடுப்பணைத் திட்டத்தை NECORD நிறுவன அனுசரனையுடன் மேற்கொண்டுவரும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கென ஒரு காரியாலயம் அமைப்பதற்கான நிதியை வழங்க ஏன் NECORD தயங்குகின்றது? இந்தக் காலகட்டத்திலாவது நீர்ப்பாசனத் திணைக்களக் காரியாலயத்திற்கான நிர்மாண வேலைக்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்ய ஆவன செய்யப்படுமா? சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கருத்தில்கொண்டு சிறந்த முறையில் செயற்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.* நலன்விரும்பிகள்.

## மக்கள் முகம்



குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலையின் புதிய அதிபராக தியாக. சோமஸ்கந்தராஜாக் குருக்கள் கடந்த 01.04.2008 இல் பதவியேற்றுள்ளார்.

* * *



புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தலைவராக பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் நடராஜா கணேசலிங்கம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர்முன்னர்பல தடவைகள்இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.தென் புலோலி புற்றளைச் சித்தி விநாயகராலய பரிபாலன சபைச் செயலாளராகவும் புலோலி வடகிழக்கு கண்ணகை அம்பாள் ஆலய இளைஞர் சபை உறுப்பினராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவர் இலங்கை மின்சார சபையின் இளைப்பாறிய மின் அத்தியட்சகர். (218)

* * *



முள்ளானை -இளவாலையைச் சேர்ந்த 'பசுமைப்புரட்சியாளர்' வைத்திலிங்கம் செகராஜசிங்கம் யாழ்.மாவட்ட சமாதான நீதவானாக கடந்த 05.05.2008இல் 83ஆவது வயதில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி இரா.வசந்தசேனன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் வலி.தென்மேற்கு பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாளராகவும், வடபிராந்திய சத்தியசாய் இணைப்புக் குழுவின் முன்னாள் செயலாளராகவும் பணியாற்றியவர்.

தற்போது மானிப்பாய் சத்தியசாய் சேவா நிலையத்தின் தலைவராக உள்ளார். சுப்புறாதரம் I இல் (Supra Grade - 1) சிரேஷ்ட பிரதம புகையிரத நிலைய அதிபராக (Station Master) கடந்த 35 ஆண்டுகள் பணியாற்றிய இவர் - போக்குவரத்து தொடர்பில் லண்டனில் ஏ.எம்.ஐ.ரி (A.M.I.T) பட்டத்தினை பெற்றுக்கொண்ட மும்மொழித் தேர்ச்சி உடையவர். (95)

* * *

இலங்கை வங்கியின் மானிப்பாய்க் கிளை முகாமையாளராக க.இலட்சுமணசர்மா கடந்த மாதம் முதல் பதவி ஏற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச (ஐ.ஓ.எம்) நிறுவனமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நடத்திய தொழிற்பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும்-

நிகழ்வில் ஐ.ஓ.எம் நிறுவன உப அலுவலக தலைமை அதிகாரி தே.யூ. ஜெனராஜ், யாழ்.பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் ஆகியோர் உபகரணங்களை பயிற்சியாளர்களுக்கு வழங்குவதை முதல் 3 படங்களிலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*


## தேர்,உற்சவம் தீர்த்த உற்சவம்



மல்லாகம் நீலியம்பனை
அருள்மிகு முதலியம்மன்
ஆலய வருடாந்த ரதோற்சவம்
நாளை (18.05.2008)
ஞாயிற்றுக்கிழமை
நடைபெறும் என்பதனையும்
அன்றைய தினம்
அடியார்களுக்கு
அன்னதானமும்
வழங்கப்படும். மறுநாள்
(19.05.2008) காலை
தீர்த்தோற்சவமும்
நடைபெறும் என்பதையும்
அடியார்களுக்கு
அறியத்தருகின்றோம்.

தேவஸ்தான அர்ச்சகர்,
சிவஸ்ரீ மு.சுப்பிரமணியம் (மணிஐயா).

(74210)



## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து




யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட
**சரவணகுமார்- ஜெயந்தி**
தம்பதியரின் செல்வப் புதல்வி
**தீப்திகா (Theebthika)** தனது
இரண்டாவது பிறந்த தினத்தை
இன்று (17.05.2008) சனிக்கிழமை
யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் வெகு
விமரிசையாகக் கொண்டாடுகின்றார். தீப்திக்
குட்டியை அன்பு அம்மா, சுருதி அக்கா, தாத்தா,
அம்மம்மா, அப்பம்மா, ஐங்கரன் மாமா குடும்பம்,
லோகன் மாமாகுடும்பம், சசிமாமா, ரேணுசித்தி,
நாகேந்திரன் பெரியப்பா குடும்பம், சிவா சித்தப்பா
குடும்பம், ஞானசேகரன் மாமாகுடும்பம் (இந்தியா)
மற்றும் அண்ணாமார், அக்காமார், மச்சான்மார்,
மச்சாள்மார், தங்கைமார் மற்றும் அன்பு உள்ளங்கள்
அனைவரும் சாந்தையர்மட பிள்ளையார் அருளால்
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

369/1, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

அ.இராமராஜ் (தாத்தா),
மாமாமார்.

(74205)



## இதோ உங்களுக்காக...!

### MP4 PLAYERS

Orange



- 2 GB (Expand 2 GB)
- Camera • FM Radio
- MP3 • Games
- Voice Recording
- USB Cable • Power Charger
- Head Phone • Driver CD

10,500/-

### MP3 PEN DRIVE

Orange



- 1 GB (Data) • FM Radio
- MP3 • Voice Recording
- USB Cable
- Head Phone

6,250/-



- 1 GB • FM Radio
- MP3 • USB Cable
- Head Phone

4,750/-

**MP3 / FM Radio Player for Vehicles 3,800/-**



**Asus F5R Notebook**

Processor : Intel Core Duo 1.73 GHz RAM : 1GB HDD : 160GB
Screen : 15.4"WXGA CD/DVD : DVD/RW VGA : 319MB
OS : Vista Home Basic WiFi / Built-In Webcam / Bluetooth / Card Reader / Optical Mouse / All Driver CDs / Bag

**ACCESSORIES**
LQ 300 + II Epson Printer - 21,000/-
Internal TV Card - 3,300/-
External TV Card - 3,400/-
LCD TV Card - 4,900/-
56 K Modem - 950/-
Woofer 2.1 - 2,500/-
Woofer 2.1 Logitec - 3,600/-
Creative 5.1 - 8,500/-
128 SD RAM - 1,300/-
512 Kingston DDR I - 3,500/-

**MONITORS**
View Sonic 15" Silver Black CRT - 12,900/-
Samsung 15" Black CRT - 11,250/-
View Sonic 17" Silver Black CRT - 16,400/-
View Sonic / Daewoo / Samsung 15" LCD - 19,500/-
View Sonic 17" Wide Screen LCD - 23,700/-

**MOTHER BOARD**
MSI DDR II Intel - 5,750/-
Foxconn DDR II Intel - 6,300/-
Asrock DDR II - 6,200/-
Intel Original 945 GCNL - 8,650/-
Asus - P5GC-Max 1333 - 7,400/-
Energy 478 - 6,500/-

**TONER (Original)**
HP Toner 12 A - 5,250/-
HP Toner 15 A - 5,300/-
HP Toner 13 A - 5,300/-
HP Toner 49 A - 5,300/-

**HARD DISK**
40 GB IDE - 3,500/-
80 GB SATA - 4,900/-
160 GB SATA - 5,900/-
250GB IDE / SATA - 8,400/-

**UPS**
East / Mercury - 5,800/-
Powertree (1.2 KV) - 12,900/-

**DVD WRITER**
Samsung SATA - 3,900/-
Sony - 4,450/-
Asus Light Scribe - 4,500/-
Combo - 3,400/-

* Warranty valid for 1 - 3 years

**MUSIC WORLD & COMPUTERS**
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 5554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


## இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும் உதவி வழங்கும் வைபவமும்

சதா பொன்ஸ் கல்வி மேம்பாட்டு நிதியத்தின் 2ஆம் ஆண்டு நிறைவு விழாவும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி உதவி வழங்கும் நிகழ்வும் நாளை மறுதினம் திங்கட்கிழமை அல் வாய் சதாபொன்ஸ் கல்வி நிலையத்தில் நிதியத் தலைவர் எம்.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

வடமராட்சி வடக்குப்பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் நெல்லியடி இலங்கைவங்கிஉதவிமுகாமையாளர் எஸ்.ஸ்ரீகாந்தன், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி ஆசிரியர் ஜே.சந்திரப்பிரகாசம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

தெரிவுசெய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி மேம்பாட்டு உதவித்திட்டத்தின் கீழ் 5 மாணவர்களுக்கு பாடசாலை கல்வி அபிவிருத்தி நிதியுதவியும் 20 மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களும் பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியும் வழங்கப்படவுள்ளன. அத்தோடு ஊன முற்ற யுவதி ஒருவருக்கு சுய தொழில் முயற்சிக் கான தையல் இயந்திரமும் வழங் கப்படவுள்ளன.

(202-218)


## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
17 ★ 09 ★ 1941



இறப்பு
03 ★ 06 ★ 2001

அமரர்
**Dr.தம்பிஐயா அருமைத்துரை (RMO)**

திதி: 17.05.2008

ஆண்டுகள் ஏழு ஆனாலும்
ஆறாது எங்கள் துயர்
என்றும் உங்கள்
நீங்கா நினைவுகளுடன்...

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(74208)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தென்னிலங்கையின் சுயரூபம் சர்வதேச ரீதியில் அம்பலம்

மனித உரிமைகளைப் பேணும் விவகாரத்தில் இலங்கையின் பெருமையும், கௌரவமும் எந்த மட்டத்தில் உள்ளன என்பது சர்வதேச மனித உரிமை ஆர்வலர் என மதிக்கப்படும் தென்னாபிரிக்கப் பேராயர் வண.டொஸ்மண்ட் டூட்டு விடுத்துள்ள பகிரங்க அறிக்கையில் அம்பலமாகியிருக்கின்றது.

மனித உரிமைகளுக்காகவும் நிற வெறிக்கு எதிராகவும் கடுமையாகப் போராடி வருபவர் வண. டூட்டு. இதற்காக 1984 இல் அவருக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது.

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் மிகக் கேவலமான பதிவுகளைக் கொண்டிருக்கும் இலங்கை, மனித உரிமைகளுக்கான ஐ.நா. கவுன்ஸிலில் இடம் பிடிப்பதற்கான தேர்வில் போட்டியிடுவது பெரும் அபத்தம் என்று வெளிப்படையாகவே விமர்சித்து, இலங்கைக்கு அதன் மோசமான நிலையை எடுத்துரைக்க முயன்றிருக்கிறார் பேராயர் டூட்டு.

தன்னுடைய சொந்த நாட்டு மக்களையே சித்திரவதை செய்து, கடத்தித் துன்புறுத்தும் ஒரு நாட்டுக்கு மேற்படி கவுன்ஸிலில் இடமேயில்லை என்பது வெள்ளிடைமலை. ஆனால் இதைப் புரியாமல், ஆசியப் பிராந்தியத்திலிருந்து இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான போட்டியில் இலங்கை குதித்திருப்பது வேடிக்கையானது என்ற சாரப்பட கருத்து வெளியிட்டுள்ள அவர், "நல்ல காலம் ஆபிரிக்கப் பிராந்தியத்திலிருந்து இந்தக் கவுன்ஸில் உறுப்பினர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு சூடானோ, ஸாம்பியாவோ போட்டியிடவில்லை." - என்பதையும் நையாண்டியாகக் கூறத் தவறவில்லை.

அதாவது, ஸாம்பியா, சூடான் நிலையிலும் கீழ் மட்டத்தில்தான் மனித உரிமைகள் விடயத்தில் இலங்கையின் நிலைமை உள்ளது என்பதை இப்படிக் கோடிகாட்டுகின்றார் அவர்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அங்கத்துவத்திற்கு 47 உறுப்புரிமை நாடுகள் தெரிவு செய்யப்படுகின்றன. அதற்கான தேர்வே இப்போது நடைபெறுகின்றது.

ஏற்கனவே இரண்டு ஆண்டுகாலம் கவுன்ஸிலில் உறுப்புரிமை பெற்றிருந்த இலங்கை, மீண்டும் அந்த உறுப்புரிமையில் நீடிப்பதற்காக இத்தேர்தல் களத்தில் குதித்திருக்கின்றது.

எதிர்வரும் 21 ஆம் திகதி - அடுத்த புதன்கிழமை - நியூயோர்க்கில் தேர்வு நடைபெறவிருக்கின்றது. ஐ.நாவின் அங்கத்துவ நாடுகள் வாக்களிக்கவிருக்கின்றன.

இந்தப் பதவியை மீளப் பெற்றுக்கொள்வதில் துடியாய்த் துடிக்கிறது இலங்கை. அமெரிக்காவில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகமவும், ஜெனிவாவில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் இலங்கைக்கு ஆதரவு திரட்டும் முயற்சியில் முழு முனைப்பாக ஈடுபட்டிருக்கின்றார்கள். பல்வேறு நாடுகளிலும் உள்ள இலங்கைத் தூதரகங்களும் அந்தந்த நாடுகளை இலங்கைக்கு ஆதரவாக வளைத்துப் பிடிக்கும் முயற்சியில் குதித்திருக்கின்றன என்றும் தகவல்.

இந்தத் தேர்தலில் இலங்கை தோற்கடிக்கப்பட வேண்டும், அப்படித் தோற்கடிக்கச் செய்வது உலக நாடுகளின் பொறுப்பு என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள பேராயர்டூட்டு, இலங்கை தோற்கடிக்கப்பட வேண்டியதற்கான காரணங்களையும் தமது பகிரங்க அறிவிப்பில் வரிசைப்படுத்தியிருக்கின்றார்.

நாற்பத்தியேழு அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐ.நா.மனித உரிமை கவுன்ஸிலின் தராதரமும், கௌரவமும் உயர்ந்த நிலையில் பேணப்படவேண்டும் என்றால், மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் நாடு ஒன்றுக்கு அந்தக் கவுன்ஸிலில் இடமளிக்கப்பட மாட்டாது என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ள பேராயர் டூட்டு, அப்படிக் காட்டுவதற்காக இலங்கையை இத்தேர்தலில் தோற்கடியுங்கள் என்று கோரியிருக்கின்றார்.

அதாவது, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு இலங்கை மீண்டும்தேர்ந்தெடுக்கப்படும் துரதிஷ்டம் நேருமானால், அது கவுன்ஸிலின் கௌரவமும் மரியாதையும் பறிபோனதாகவே அர்த்தம் கொள்ளப்படும் என்றும் சொல்லாமல் சொல்லியிருக்கின்றார் பேராயர் டூட்டு.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவத்தின் சிந்தனைப் போக்கு எத்தகையது என்பதை உலகுக்கு அம்பலப்படுத்துவதற்காகவே கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர் தாயகப் பிரதேச மக்கள் வாக்களிக்காமல் ஒதுங்கி நின்று, தெற்கைத் தமது அரசியல் தலைமையை சுயாதீனமாகத் தேர்ந்தெடுக்க அனுமதித்தனர்.

அத்தகைய தேர்வு அனுமதியின் பெறுபேறு - விளைவு - தெனனிலங்கையின் சுயரூபத்தை அம்பலப்படுத்தி வருகின்றது என்பதற்குப் பேராயர் டூட்டுவின் பகிரங்க அறிக்கை ஓர் உரைகல்.

ஈழத் தமிழர் விடயத்தைக் கையாள்வதில் தென்னிலங்கை அரசு எத்தகைய கொடூரப் போக்கைக் கொண்டுள்ளது என்பது பகிரங்கமாகி வருவதால், ஈழத் தமிழரின் போராட்ட நியாயம் சர்வதேசத்தினால் சரிவர உணரப்படும் சாதகமான சூழ்நிலையும் தோன்றி வருகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய தமிழர் தரப்பின் காய் நகர்த்தலின் பெறுபேற்று அம்சமாகவும் இதனை நோக்கலாம்.

# வன்னிப் போர்க்களத்தில் படைத்தரப்பின் வியூகங்கள் எவையும் பயன்தரவில்லை

## விடுதலைப் புலிகள் ஏடு தகவல்

"வன்னிப்போரின் செல்நெறி கண்டு சிங்கள ஆட்சியாளர்கள் குழம்பிப்போயுள்ளனர். அவர்கள் எதிர்பார்த்தபடி படைத் தலைமையின் படையெடுப்பு வியூகங்கள் பயன்கொடுக்கவில்லை."

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏடான"விடுதலைப் புலிகள்" ஏடு தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வெளிவந்த "விடுதலைப் புலிகள்" ஏட்டில் இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

வன்னிப்போரின் செல்நெறி கண்டு சிங்கள ஆட்சியாளர்கள்குழம்பிப்போயுள்ளனர். அவர்கள் எதிர்பார்த்தபடி படைத் தலைமையின் படையெடுப்பு வியூகங்கள் பயன்கொடுக்கவில்லை. வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழர் சேனைக்கும் - சிங்களப் படைக்கும் இடையில் நடக்கும் பலப்பரீட்சையில் புலிகளின்கைமேலோங்கத் தொடங்கிவிட்டது என்று இராணுவ ஆய்வாளர்கள் கருத்துக்கூறத் தொடங்கிவிட்டனர்.

புலிகளின் பலம் - பலவீனம் என்பவற்றை ஆராய்ந்து புலிகளைத் தோற்கடிக்கக்கூடிய இராணுவத் திட்டம் ஒன்றைத் தாம் வெற்றிகரமாக வரைந்து விட்டதாகவே சிங்களத் தரப்பு நினைத்திருந்தது. அந்த நம்பிக்கையிலேயே வன்னிப்போரின் முடிவு தொடர்பாக காலக்கெடுக்களையும் பகிரங்கமாக அறிவித்து படை செருக்கடைந்திருந்தது."ஜெயசிக்குறு" படை நடவடிக்கை தோல்வியில் முடிந்ததற்கான காரணிகளை ஆராய்ந்து அதிலிருந்து பாடங்கள் படித்த நிலையில் ஒரு புதிய படைநகர்வு வியூகத்தைச் சிங்களப் படைத் தலைமை கண்டுபிடித்திருந்தது.

பெரும் எண்ணிக்கையான படையினரையும் - பிரமாண்டமான சூட்டு வலுவையும் - வரையறுக்கப்பட்ட குறுகிய களமுனையில் பயன்படுத்தி எதிர்ப்படும் அனைத்தையும் அழித்தொழித்துக்கொண்டு செல்லும் புல்டோசர் நகர்வுத் திட்டத்தை ஜெயசிக்குறு நடவடிக்கையில் படையினர் பயன்படுத்தியிருந்தனர். விரைவான நில ஆக்கிரமிப்புத்தான் இந்தப் போர்த் திட்டத்தின் நோக்கம். ஆயினும் அந்த நெருப்பு மழைக்குள்ளும் நின்றுபிடித்து வீரம் காட்டி - வியூகம் வகுத்து ஜெயசிக்குறு பூதத்தைப் புலிகள் கொன்று வென்றனர்.

### இயன்றளவில் புலிகளைக் கொல்வதே நோக்கம்

பெயர் சூட்டப்படாது - படையினர் செய்யும் தற்போதைய வன்னிப் படையெடுப்பில் இன்னொரு வகையான படையெடுப்புத் தந்திரத்தைப் படையினர் கைக்கொள்கின்றனர். பரந்த முன்னரங்கில் போர் அரங்கைத் திறந்து சிறிய சிறிய குழுக்களாகப் படையினரைப் பிரித்து - நாள்தோறும் சிறுசிறு சண்டைகளை அங்கெல்லாம் நடத்தி - மெதுமெதுவாக நிலம் விழுங்கப் படையினர் முனைகின்றனர். இந்தச் சண்டைத் தந்திரத்தின் பிரதான நோக்கம் இயன்றளவு புலிகளைக் கொல்வது என்பது தான்.

கடந்த ஒன்றரை வருடகாலமாக வன்னிப் போரரங்கின் மேற்கு (மன்னார்) மற்றும் கிழக்கு (மணலாறு) முனைகளில் இவ்வாறானதொரு படைநகர்வுத் திட்டத்தையே பெரும்பாலும் அவர்கள் கைக்கொள்கின்றனர். ஆனால் எதிர்ச் சமர்புரிந்து வீரச்சாவடையும் புலிகளை விட மிக் அதிகளவில் படையினர் கொல்லப்படுகின்றனர். நில ஆக்கிரமிப்பிலும் வெற்றிபெற முடியாமல் அதேவேளை பெருமளவு படையினரையும் இழந்து படைத்தரப்பு முடங்கிப் போயுள்ளது. கடந்த ஏப்ரல் 13 ஆம் திகதி வடபோரரங்கில் ஒரு பாரிய வலிந்த தாக்குதலைச் சிங்களப் படைகள் செய்தன. வன்னிப் போரரங்கில் தற்போது சிங்களப்படை பயன்படுத்தும் சண்டை முறையில் விரக்தியடைந்தே இந்தப் பழைய பாணிப் பெருந் தாக்குதலை அவை நடத்தின. அதுவும் படுதோல்வி கண்டுவிட்டது. பழைய தந்திரமும் பலிக்கவில்லை - புதிய வியூகங்களும் எடுபடவில்லை என்ற விரக்தி நிலையில் சிங்களப் படைத்தலைமை உள்ளது. இந்த விரக்தியின் வெளிப்பாடாகச் சிங்களத் தளபதிகளுக்குள் கருத்து மோதல்களும் எழுந்துள்ளன. இந்த இராணுவச் சூழலிலேயே தனது பழைய புல்டோசர் திட்டத்தை வடபோரரங்கில் நடைமுறைப்படுத்த முயன்று அதிலும் படுதோல்வி கண்டுள்ளது படைத்தரப்பு.

### வன்னிப் போர் அரங்கின் காட்சி மாறுகின்றது

படையினரின் இந்தப் போர்த்திட்டங்களுக்கும் - இராணுவக் கோசங்களுக்கும் தக்க பதிலடி கொடுக்கும் வகையில் தலைவர் பிரபாகரன் மாற்றுத் திட்டங்களையும் புதியபுதிய முறியடிப்பு வியூகங்களையும் வரைந்து சிங்களப் படைக்குப் பதிலடி கொடுத்து வருகின்றார். சிங்களப் படைத்தரப்பின் திட்டங்கள் மெதுமெதுவாகப் புலி வீரர்களால் முடக்கப்பட்டு வருவதால் வன்னிப் போரரங்கம் காட்சி மாற்றம் கண்டுவருகின்றது. திட்டங்கள் தவிடு பொடியாகியதால் சிங்களப்படையின் உணர்வுகள் சிதைந்து திணறுவது ஒருபுறம் நடக்க மறுபுறத்தில் போரியல் திறனை வெளிப்படுத்தி இராணுவச் சாதனைகள் புரியும் புலிகள் இயக்கத்தின் பல வெளிப்பாடு தமிழ் மக்களுக்கு உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் வழங்கி வருகின்றது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# நிவாரணத்திற்கு வழங்கப்பட்ட அரிசி கோழிகளுக்கு உணவாகின்றது

யாழ்ப்பாணம், மே 17

நிவாரணத்துக்கு வழங்கப்பட்ட அரிசி பாவனைக்கு உதவாததால் கோழிக்கு உணவாகப் பயன்படுத்தப்படுகின்றது.

கைதடி-நாவற்குளி பகுதி மக்களுக்கு தென்மராட்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடை யில் வழங்கப்பட்ட அரிசியே கோழி உணவாக பயன்படுத்தப்பட்டு வருதாக தெரிவிக்கப்பட்டது.

கைதடி-நாவற்குளி தெற்குக் கிளைக்கு இரண்டு கட்டங்களுக்கென வழங்கப்பட்ட அரிசி மூடைகளில் இரண்டு மூடைகள் தவிர்ந்த ஏனைய மூடைகள் வண்டுகள் கூடு கட்டி காணப்பட்டதாகவும் இதனை உணவுக்கு பயன்படுத்த முடியாத சிலர் கோழி உணவாகப் பயன்படுத்துவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தமக்கு வழங்கப்பட்ட அரிசி குறித்து உரிய அதிகாரிகளுக்கு அறி விக்க உள்ளதாகவும் தெரிவித்தனர். (202-207)

# திருமறைக்கலாமன்றத்தின் தயாரிப்பில் இப்ஸனின் 'தலைமைக் கட்டடக்காரன்'

## நாளை கலைத்தூது கலையகத்தில் மேடையேறுகின்றது

திருமறைக்கலாமன்றத்தின் தயாரிப்பில் உலகப்புகழ் பெற்ற நாடக ஆசிரியர்களுள் ஒருவரான ஹென்றிக் இப்ஸனின் 'தலைமைக் கட்டடக்காரன்' (The Master Builder) என்னும் நாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை இரு காட்சிகளாக, 286, பிரதான வீதி , யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

இலவசமாக காண்பிக்கப்படவுள்ள இந் நாடகம் மு.ப 10 மணிக்கு மாணவர்களுக்காகவும், பி.ப. 3.30 மணிக்கு ஏனையவர்களுக்காகவும் அளிக்கை செய்யப்படவுள்ளது.

ஹென்றிக் இப்ஸன் நவீன நாடகத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர். நோர்வேஜிய மொழியில் இவர் எழுதிய யதார்த்த நாடகங்கள் கடந்த நூற்றாண்டில் ஐரோப்பா முழுவதிலும் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்ததுடன் , சமூக மாற்றத்தின் குறிகாட்டிகளாகவும் போற்றப்பட்டன. இவரது 'தலைமைக் கட்டடக்காரன்' என்னும் இந்நாடகம் யதார்த்த குறியீட்டு நாடக வகையைச் சேர்ந்ததாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் நிலவிய குடும்ப,சமூக சூழலைப் பின்னணியாகக் கொண்டு 1892 இல் இந்நாடகத்தை நோர்வேயின் தலை சிறந்த நாடக ஆசிரியரான கிப்ஸன் படைத்திருந்தார். மனித வாழ்வியல் நடத்தையின் சில பரிமாணங்களைக் குறிப்பாக, மனிதனில் முரண்படும் உளவியல் யதார்த்தங்களையும், கற்பனைப்படிமங்களையும் ஒரு கட்டடக்கலைஞனின் வாழ்வியல் குறியீட்டினூடாக வெளிப்படுத்துகின்ற நாடகமாக இது அமைந்துள்ளது.

இந் நாடகம் நோர்வேத் தூதரகத்தின் அனுசரணையில் திருமறைக்கலாமன்றத்தின் தயாரிப்பில் முதல் தடவையாக கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் மருதானை டவர் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டு அனைவரது பாராட்டுக்களையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழில் எம். முத்தையாவினால் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந் நாடக எழுத்துருவை , திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநரும், நாடக ஆசிரியருமான யோ.யோன்சன் ராஜ்குமார் நெறியாள்கை செய்துள்ளார். இந் நாடகம் திருமறைக்கலாமன்றம் இவ்வாண்டில் தயாரித்து வழங்கும் ...வது மி... பெரும் அரங்க அளிக்கையாக அமைகின்றது. (202)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 05 | 18.05.2008 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: சதுர்த்தசி | முழுவதும் |
| நட்சத்திரம் : | சுவாதி பி.இ. 01.13வரை |
| சுபநேரம் : | 08.52 - 10.22 |
| இராகுகாலம் : | 04.22 - |

# அறிமுகப் பயிற்சி

யாழ்ப்பாணம்,மே 17

மாகாண பொது நிர்வாக செயலகத்தினால் நியமிக்கப்பட்ட புதிய முகாமை உதவியாளர்களுக்கான நான்கு நாள்கள் அறிமுகப் பயிற்சி எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை யாழ்.வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பொது நிர்வாக செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ்.பிராந்திய துணையாளர் அலுவலகத்தினால் இப்பயிற்சி வகுப்புகள்நடத்தப்படவுள்ளது.

அண்மையில் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர்களில் ஒரு தொகுதியினருக்கு கடந்த வாரம் அறிமுகப் பயிற்சி நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-207)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 17

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனங்களின் அனுசரணையுடன் நடத்தும் - 30 ஓவர்கள் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட - கிரிக்கட் சுற்றுப் போட்டி இன்று யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டத்தை இந்துக்கல்லூரி அதிபர் வி.கணேசராசா ஆரம்பித்து வைப்பார்.

இன்றைய ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:-

* காலை 8.30மணிக்கு - ஜொலிஸ்ரார் வி.க. எதிர் வண்ணை காமாட்சி வி.க.

* பி.ப. 1 மணி- மானிப்பாய் பரிஷ் வி.க. எதிர் தெல்லிப்பழை யூனியன் வி.க. (01-86)

★ ★ ★

வலி.வடக்கு, மே 17

உடுவில் பிரதேசத்தில் இயங்கும் தேசிய இளைஞர் சேவை மன்றங்களுக்கு இடையிலான கபடி மற்றும் எல்லே போட்டிகள் இன்று காலை 8.30 மணி முதல் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கு முதலமைச்சர் பதவி தராவிடின் அரசை விட்டு விலகி ஐ.தே.கட்சியில் இணைக!

## அமைச்சர்கள் - பிரதியமைச்சர்களுக்கு வேண்டுகோள்
## புத்திஜீவிகள், அரசியல் அவதான அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, மே 17

''முஸ்லிம் ஒருவருக்கு முதலமைச்சர் பதவியைத் தர அரசு மறுக்கும் பட்சத்தில் அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் அரசின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதன் மூலம் முதலமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த முடியும்''

- இப்படித் தெரிவிக்கின்றது முஸ்லிம் புத்திஜீவிகள் மற்றும் அரசியல் அவதான அமைப்பு.

இந்த அமைப்பின் பெயரில் அதன் செயலாளர் ரஹ்மான் ஏ. ஷரீப் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

முஸ்லிம் ஒருவர் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக வரவேண்டும் என உண்மையிலேயே முஸ்லிம் அமைச்சர்கள் விரும்புவார்களானால், அதைப் பெறுவதற்கான வழிகள் பல உள்ளன என முஸ்லிம் அரசியல் அவதானிகளும் புத்திஜீவிகளும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால், அவற்றை நிறைவேற்றுவதற்கு முன்னர், ஹிஸ்புல்லா முதலமைச்சரா? அல்லது ஒரு முஸ்லிம் முதலமைச்சரா என்ற தீர்மானத்திற்கு வரவேண்டியது அவசியம் எனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 8 முஸ்லிம் உறுப்பினர்களும் தனித்தனிக் குழுக்கள் என அரசு பிரசாரப்படுத்தி வருகின்ற ஒரு சூழ்நிலையில், நாங்கள் அனைவரும் முஸ்லிம்கள் - ஒரே குழுவின் உறுப்பினர்கள் என்ற ஒற்றுமையை வெளிக்காட்டுவதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து ஒதுங்கி ஐக்கிய தேசியக்கட்சியோடு இணையவேண்டும். அதன் மூலம் கிழக்கு மாகாண சபையில் அரசின் பலத்தைக் குறைத்து, முஸ்லிம் முதலமைச்சரைப் பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொள்ள முடியும்.

அதற்கான வழிகாட்டலை அரசிலிருக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் செய்வதற்கு முன்வரவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைய விரும்பாவிட்டால், எதிர்த்தரப்பில் ஒரு சுதந்திரமான குழுவாக அமர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெரும்பான்மைப் பலத்தை சிதறச் செய்து, அதன் மூலமாக முஸ்லிம் ஒருவரைக் கிழக்கு மாகாண முதலமைச்சராக நியமித்துக் கொள்ளலாம்.

ஆனால், ஹிஸ்புல்லாவைத் தான் முதலமைச்சராக்குவது என்ற பிடிவாத்தில் இருந்தால், இறுதிவரை முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரைப் பெற்றுக்கொள்ள முடியாது.

இந்த யதார்த்தத்தை முஸ்லிம் அமைச்சர்கள் உள்வாங்கி செயற்பட வேண்டும். ஏனெனில் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரைப் பெறுவதற்கான வாய்ப்பு, அதற்கான சந்தர்ப்பம் இன்று முஸ்லிம் அமைச்சர்களினதும், தெரிவு செய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாண சபை முஸ்லிம் உறுப்பினர்களினதும் கைகளிலேயே தங்கியிருக்கின்றது.

பொன்னான இந்த வாய்ப்பைத் தவறவிடுவதன் மூலம் முஸ்லிம்கள் முதலமைச்சரை பெற்றுக்கொள்ள முடியாத ஒரு வரலாற்றுத் தவறை அவர்கள் செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் எனவும் புத்திஜீவிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்- என்று அதில் உள்ளது. (வ - க)

## கொக்குவிலில் 6 வீடுகளில் திருட்டு

யாழ்ப்பாணம், மே 17

கொக்குவிலில் நேற்று அதிகாலை 6 வீடுகளில் திருட்டுகள் இடம்பெற்றுள்ளன.

கொக்குவிலில் இராமுப்பிள்ளை வீதி, மஞ்சவனப்பதி வீதி ஆகியவற்றில் உள்ள வீடுகளிலேயே இத்திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

குறித்த வீடுகளில் நீரிறைக்கும் இயந்திரங்கள் மற்றும் சைக்கிள்கள் என்பன திருட்டுப்போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

## சர்வதேச குடும்பங்கள் தின விழா திக்கத்தில் சிறப்புற நடைபெற்றது

யாழ்ப்பாணம், மே.17


வடமராட்சி திக்கத்தில் சர்வதேச குடும்ப தின விழா சேவாலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை சிறப்புற நிடைபெற்றது.

நிறுவனத்தின் ''எமது இல்லம்'' செயற்திட்டத்திற்கமைவாக இவ் விழா நடத்தப்பட்டது.

சேவாலங்கா நிறுவனத்தின் உள சமூகப் பணியாளர் செல்வி இ.உமாசசிரேசா தலைமயில் நடந்த விழாவில் பிரதம விருந்தினராக பொதுச் சுகாதார மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி புஸ்பராணி வெற்றிவேலு கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக சுகாதார பரி சோதகர்களான எம் ரவிச்சந்திரன் , ப.பர மேஸ்வரி மற்றும் கிராமசேவையாளர் எஸ். வதனரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். சந்தோஷமான குடும்பக் கட்டமைப்பு தொடர்பான கலந்துரையாடலும் அது தொடர்பான கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

(202-302)




ஜனசக்தி இன்சூரன்ஸ் கோ.லிமிட்டெட் நிறுவனத்தினர் இயற்கை மரணமடைந்த க.தாமினியின் தந்தைக்கு இழப்பீட்டுத்தொகையாக 3 லட்சத்து 389 ரூபாவை வழங்கியுள்ளனர். காப்புறுதித் தொகையை உதவி முகாமையாளர் க.செல்வராஜன் வழங்குவதையும் அருகில் வியாபாரா அபிவிருத்தி நிறைவேற்று அதிகாரிகளான செ.பிரபாகரன் ஞா.கணேசலிங்கம் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## பொங்கல் விழா

வலி வடக்கு. மே 17

மல்லாகம் சந்தி தெல்லியம்வற்றை ஞானவைரவர் ஆலய விசாகப் பொங்கல் விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. முறபகல் 9 மணிக்கு விசேட அபிஷேகம் ஆராதனையும் இடம்பெறவுள்ளன. (202-86)

## யாழ்.வலய ஆசிரியர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாண கல்வி வலய ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளன.

ஆரம்பப் பிரிவு தரம் 3 ஆசிரியர்களுக்கான கல்வி மறுசீரமைப்பு அமுலாக்கம் பற்றிய மீள வலியுறுத்தல் செயலமர்வில் இன்றும் நாளையும் நல்லூர் கோட்ட ஆசிரியர்களுக்கும், எதிர்வரும் திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் யாழ். கோட்ட ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கோப்பாய் ஆசிரியர்களுக்கு யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

கோப்பாய் கோட்டத்தில் தரம் 11 இல் விஞ்ஞான ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை யாழ் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும். தரம் 10, 11 இற்கான வரலாறு பாட செயலமர்வு இன்று ஆசிரியர் நிலையத்திலும் நாளையும் நாளை மறுதினமும் யாழ் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்திலும் நடைபெறும்.

தரம் 12, 13 இல் உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று யாழ் மத்திய கல்லூரியில் இடம்பெறும்.

தரம் 10, 11 இல் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை யாழ்.ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறும்.

விசேட கல்வி தொடர்பான சிறுவர் முகாம் இன்று விசேட கல்வி நிலையம் ஊரெழு கணேசா வித்தியாலயத்தில் நடைபெறும்.

வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் தரம் 6, 7 இற்கான செயலமர்வு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் செவ்வாய்க் கிழமையும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நாளை மறுதினமும் நடை பெறும்.

புவியியல், வரலாறு (ஆங்கில மொழி மூலம்) தரம் 6- 11 இற்கான செயலமர்வு நாளை மறுதினம் யாழ் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும்.

மனித மேம்பாட்டுக் கல்வி - முதன்மை நிலை 1 ஆசிரியர்களுக்கான செயலமர்வு திங்கள், செவ்வாய் கிழமைகளில் யாழ் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் மாவட்ட ஆரம்பக் கல்வி, சமூகக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் பங்குபற்றுவதற்கான வதிவிடச் செயலமர்வு 21, 22 ஆம் திகதிகளில் உதயன் தங்கக விடுதியில் யுனிசெவ் அனுசரணையுடன் நடைபெறும். (202)

## ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் வெட்டுப்புள்ளி இன்னும் இரு வாரங்களில்

கொழும்பு. மே 17

கடந்த வருடம் நடைபெற்ற ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் வெட்டுப்புள்ளி இன்னும் இரு வாரங்களில் வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மீளாய்வுப் பெறுபேறுகள் கடந்த திங்கட்கிழமை கிடைத்துள்ளன.அதன் அடிப்படையில் இன்னும் 2 வாரங்களில் வெட்டுப்புள்ளியை வெளி யிட முடியும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்கா தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு இம்முறை 73 பட்டப்படிப்பு அலகுக ளில் 19 ஆயிரத்து 652 மாணவர்களை அனுமதிக்க உள்ளது. அத்துடன் இம் முறை 10 புதிய பட்டப்படிப்பு பயிற்சி நெறியையும் அறிமுகப்படுத்த உள்ளது எனவும் சமரநாயக்க மேலும் தெரிவித்தார். (202)

# 58ஆம் ஆண்டு கலவரத்தின் 50ஆவது வருடநிறைவை நினைவு கூருவோம்

## புலிகளின் கல்விக்கழகப் பொறுப்பாளர் கருத்து

கொழும்பு, மே.17

''தமிழ் மக்களுக்கு எதிராகப் சிங்களப் பேரினவாத அரசுகள் மேற்கொண்ட இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் 50ஆவது ஆண்டு நிறைவு தினம் எதிர்வரும் 23ஆம் திகதியாகும். இந்த 50 ஆண்டுகால இனஅழிப்பு நடவடிக்கைகளை நாம் எமது இனத்தின் உள்ளங்களில் விதைக்க வேண்டும்.''

- இவ்வாறு தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

1958ஆம் ஆண்டு தென்னிலங்கையில் தமிழர்கள் மீதான சிங்களப் பேரினவாதத்தின் படுகொலைகளின் 50ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி நடைபெறவுள்ள நிகழ்வுக்கான கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

1958ஆம் ஆண்டு தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கை சிங்களப் பேரினவாதத்தின் கொடுமையின் முதல் பெரும் வெளிப்பாடாக அமைந்தது. அறப்போராட்ட வழிகளில் உரிமை கேட்ட தமிழ் மக்களுக்கு 50 ஆண்டுகளுக்கு முன் சிங்களப் பேரினவாதம் கொடுத்த பதில் வன்முறைகளும் படுகொலைகளும்தான்.

மட்டக்களப்பில் [illegible]ந்துறையைச் சேர்ந்த சிங்கள ஆசிரியை ஒருவர் தமிழர்களால் படுகொலை செய்யப்பட்டார் என வதந்தியைப் பரப்பிய சிங்களப் பேரினவாதிகளும் காடையர்களும் தமிழர்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். சிங்களக் காடையர்களுக்கு பண்டாரநாயக்க அரசு முழுமையான ஆதரவை வழங்கியிருந்தது.

அப்போதைய அரசு தடுக்கவில்லை

பண்டாரநாயக்க அரசு நினைத்து இருந்தால் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழர்கள் மீதான சிங்களக் காடையர்களின் வன்முறையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கலாம். அதனைப் பண்டாரநாயக்க அரசு செய்யத் தவறியது. செய்யத் தவறியதுடன் வன்முறையாளருக்கும் துணை போனது.

சிங்களப் பேரினவாத சக்திகளின் அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரானது எமது விடுதலைப் போராட்டம். எமது விடுதலைப் போராட்டம் இடையில் முளைத்த ஒன்றல்ல.

தமிழர்களின் நீண்டகால அறவழியிலான போராட்டத்தின் தொடர்ச்சியாகவே ஆயுதப் போராட்டம் அமைந்து இருக்கின்றது. இதற்கு ஈழத் தமிழர்களின் வரலாறு சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழ் மக்கள் மீது நிகழ்த்திய வன்முறைகள், படுகொலைகள் சாட்சிகளாக உள்ளன.

இந்த வகையில்தான் 50 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களுக்கு எதிராக சிங்களவர் நிகழ்த்திய படுகொலைகளை இனச் சுத்திகரிப்பை நாம் நினைவுகூர வேண்டும். அதனை எமது இன்றைய தலைமுறையின் உள்ளங்களில் விதைக்க வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய்க் குழாய் வெடித்துச் சிதறி விபத்து நைஜீரியாவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலி

லாகோஸ், மே 17

நைஜீரிய வர்த்தகத் தலைநகரான லாகோஸில் எண்ணெய்க் குழாயொன்று பயங்கரமாக வெடித்துத் தீப்பற்றியது. இதில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அநேகர் தீக்காயங்களுக்குள்ளாகினர் என உள்ளூர் செஞ்சிலுவைச்சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு உள்ளூர் நேரப்படி 7.30 மணியளவில் ஐஜிகன் புறநகர்ப் பகுதியில் புல்டோசர் ஒன்று மோதியதை அடுத்து இக்குழாய் பயங்கரமாக வெடித்தது. இதனால் எழுந்த தீ பாடசாலைக் கட்டடங்களுக்கும் வீடுகளுக்கும் பரவியது. தீயணைப்புப் படையினர் போராடித் தீயை நள்ளிரவில் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்தனர் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.



எரிகாயங்களுக்குள்ளான அநேகர் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப் பட்டனர். தீக்கு இரையான பாடசாலைகளிலிருந்த சிறார்களும் இறந்திருப்பர் என்ற அச்சம் தலைதூக்கியுள்ளது. மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

தீயணைப்புப் படையினர் மணலைக் கொட்டியும் நீரைப் பீய்ச்சி அடித்தும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். பல வீடுகள் தீக்கு இரையாகிவிட்டன. பலர் காணாமற் போயுள்ளனர். காணாமற்போனோரை அவர்களின் குடும்பங்கள் தேடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன என்றும் அவர்கள் விவரித்துள்ளார்கள்.

பாரதூரமான தீக்காயங்களால் ஆபத்தான கட்டத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 36 பேர் அண்மையிலுள்ள இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என தேசிய அவசரகாலச் சேவை முகாமைத்துவ முகவர் நிறுவனப் பேச்சாளர் அப்துல் சலாம் மொஹமத் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

உலகிலுள்ள முக்கிய எண்ணெய் உற்பத்தி நாடுகளில் நைஜீரியாவுமொன்று. இதன் எண்ணெய்க்குழாய்கள் எண்ணெய் உற்பத்திப் பகுதிகள் லாவோஸ், இதர நகரப் புறங்கள், குடியிருப்புப் பிரதேசங்கள் ஆகியவற்றை ஊடுருவிச் செல்கின்றன. இதற்கு முன்னரும் அங்கு குழாய்கள் வெடித்து அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.



மத்திய கிழக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், நேற்றுமுன்தினம் இஸ்ரேலுக்குச் சென்றிருந்தார். அங்கு அவர், பிரதமர் எகுட் ஒல்மோட்டைச் சந்தித்துப் பேசினார். அப்போது ஒல்மோட்டினால் தமக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசான சைக்கிளை குதூகலத்துடன் ஓட்டிக்காட்டும் புஷ்.

# இலங்கைக் கடற்படை கைது செய்த மீனவர்களை விடுவிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## உறவினர்கள் உருக்கமான வேண்டுகோள்

சென்னை, மே 17

தலைமன்னார் கடற்பரப்பினுள் வைத்து கடந்த 9ஆம் திகதி இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட 19 இந்திய மீனவர்களும், இலங்கைச் சிறையில் வைத்து அடித்துத் துன்புறுத்தப்படுகின்றனர் என்றும், அவர்களைப் பத்திரமாக மீட்டுத் தருமாறு தமிழக அரசிடம் அவர்களின் உறவினர்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்றும் தமிழக நாளேடுகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து மேலும் வெளியான தகவல்கள் வருமாறு-

இந்த மீனவர்கள் ராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடம் பகுதி மாந்தோப்பைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் இம்மாதம் 5ஆம் திகதி நான்கு நாட்டுப் படகுகளில் கடலில் மீன்பிடிக்கப் புறப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 19 மீனவர்களையும் தலைமன்னார் கடற்பரப்பினுள் கடந்த 9ஆம் திகதி அத்துமீறி நுழைந்தனர் என்று கூறி கைதுசெய்த கடற்படையினர், அவர்களைச் சிறையில் வைத்து அடித்து, உதைத்துத் துன்புறுத்துகின்றனர் என்றும் அவர்களைப் பத்திரமாக மீட்பதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அவர்களின் உறவினர்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தஞ்சம் கோருகின்றார் வேதமூர்த்தி

லண்டன், மே.17

லண்டனில் தமது சுயவிருப்பின் பேரில் அஞ்ஞாதவாசமிருக்கும் மலேஷிய இந்திய வம்சாவளியினரின் உரிமைகளுக்கான ஹிண்ட்ராப் அமைப்பின் தலைவர் பொன்னுசாமி வேதமூர்த்தி, பிரிட்டனிடம் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார். அத்துடன், தமது கடவுச்சீட்டை இரத்துச் செய்தமைக்காக மலேஷிய அரசையும் சாடியுள்ளார்.

(சி)

# ஈரான் தூதரக வாகன அணி மீது தாக்குதல்

பக்தாத், மே17

ஈராக்கிலுள்ள ஈரானிய தூதரக அதிகாரிகள் பயணித்த வாகன அணி, பக்தாத்தில் நேற்றுமுன்தினம் துப்பாக்கிதாரிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகியது. அதில் இரு இராஜதந்திரிகள் உட்பட மூன்று ஈரானியர்கள் காயமடைந்தார்கள். ஈராக்கியர் ஒருவரும் காயமடைந்தார் என நேற்று வெள்ளிக்கிழமை, ஈரானிய துதரகப் பேச்சாளர் மனேச்சர் தஸ்லிமி தெரிவித்தார்.


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### சந்தை, இறைச்சிக் கடைகள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான

## மீள் கேள்வி அறிவித்தல் - 2008

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி சந்தை, இறைச்சிக்கடைகள் 01.06.2008ஆம் திகதி முதல் 31.12.2008 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்.மாநகர சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் (வற் நீங்கலாக) ரூபா 400.00
கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி 21.05.2008 தொடக்கம்
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் 29.05.2008 ந.பகல் 12.00 மணிவரை
கேள்வி திறத்தல் 29.05.2008 பி.ப. 2.30 மணிக்கு

விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்திசெய்து கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகர சபை இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநாகர சபை ஆணையாளர், மாநாகர சபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு 29.05.2008 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்கள் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

குறிப்பு:

1. சந்தையைக் குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியில் 3 வீதம் கட்டணத்தைப் பெறலாம். அல்லது வியாபரம் செய்யும் இடத்திற்கு (கல்லுக்கு) ரூபா 40.00 பெறலாம். மேலதிகமாக எதுவித வரியும் அறவிடக்கூடாது.

2. சபையின் கடைகளில் இறைச்சி விற்பனை செய்யும் உரிமையாளர்கள் மாத வாடகை செலுத்தவேண்டும்.

3. சபையின் கடைகள் இல்லாத இடமாகிய ஜின்னா வீதிக்கு கேள்வி விண்ணபபம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடங்களின் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதங்களையும் இணைத்தல் வேண்டும்.

4. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை, என்பவற்றிற்கு 15% பெறுமதி சேர்வரி (வற்) செலுத்துதல் வேண்டும்.

5. சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின 1/3 பகுதியைச் செலுத்தி ஒப்பந்தத்தை சபையுடன் முடித்துக்கொள்ளவேண்டும். மிகுதித் தொகையின் 1/4 பங்கை 2008 யூலை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி செலுத்த வேண்டும்.

6. கேள்வி விண்ணப்பப் பத்திரங்கள் கோருபவர்கள் அடையாள அட்டையுடன் அதன் ஒளிப்படப்பிரதி ஒன்றை கொண்டு வருதல்வேண்டும்.

7. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநாகரசபை ஆணையாளராகிய எனக்கு இருக்கின்றது.

8. இறைச்சிக்கடை விண்ணப்பங்கள் பெறுபவர்கள் முன்பு மாநாகரசபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தினால் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

மேலும் மேலதிக விவரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் யாழ்.மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

மு.செ.சரவணபவ
மாநாகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

| தொ. இல | பொதுச்சந்தை | மீளளிக்கக் கூடிய கேள்விப்பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (15% பெறுமதி சேர்வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1. | பெரியகடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 438,150.00 |
| 2. | இறைச்சிக்கடைகள் | | |
| | 1. குருநகர் மாட்டிறைச்சிக் கடை இல. 07 | 7,000.00 | 55,470.00 |
| | 2. ஜின்னா வீதி ஆட்டிறைச்சிக் கடை | 5,000.00 | 14,296.00 |
| | 3. [illegible]குந்தா ஆட்டிறைச்சிக்கடை இல 02. | 5,000.00 | 78,500.00 |


# காற்று, சூரியஒளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் காற்றோட்டமுள்ள அறையில் தடுத்து வைக்கப்பட வேண்டும் என வற்புறுத்தியும் -

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதங்களை அனுப்புமாறு மனித உரிமை ஆர்வலர்களையும், பொதுமக்களையும் மன்னிப்புசபை கேட்டுள்ளது.

அது மேலும்தெரிவித்துள்ளவைவருமாறு:-

பத்திரிகையாளர் ஜே.எஸ்.திஸநாயகத்திற்கு கண் மருத்துவர் ஒருவரை சந்திப்பதற்கான அனுமதிமே9ஆம்திகதிவழங்கப்பட்டது.

குறிப்பிட்ட கண் மருத்துவர் திஸநாயகம் தொடர்ச்சியாக கண் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டும், அவரது கண்ணின் நிலை மாற்றமடைந்துள்ளதால் புதிய கண்ணாடியைப் பயன்படுத்த வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார். திஸநாயகத்தின் கண்களை கண் மருத்துவர் ஒருவர் மீண்டும் இம்மாதத்தில் பரிசோதிக்க வேண்டும்.

மார்ச் 21ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட திஸநாயகத்திற்கு இரண்டு மாதங்களின் பின்னர் மே 14ஆம் திகதி அவரது சட்டத்தரணியைச் சந்திப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், அவர் இன்னமும் குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படாத நிலையில் தொடர்ந்தும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் ஒருவரை மாதத்திற்கு ஒருமுறை நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர்படுத்த வேண்டுமென்ற அவசரகாலச் சட்ட விதிகளின்படி திஸநாயகம் மே 12 ஆம் திகதி நீதிமன்றத் திற்கு கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும்.

எனினும், உரிய காரணங்கள் எதுவும்தெரிவிக்கப்படாமல் இது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நீதிவான் மீண்டும், மீண்டும் வலியுறுத்திய போதிலும் குறிப்பிட்ட திகதியில் திஸநாயகம் ஆஜர்படுத்தப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து மே 23ஆம் திகதிஅவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

திஸநாயகம் காற்று, சூரிய ஒளியற்ற இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)


## கந்தர்மடம், அரசடி வீதி அருள்மிகு செல்வ நாகபூசணி அம்பாள் திருக்கோயில்

## தீமிதிப்பு

வைகாசி விசாகத் திருநாளில் 19.05.2008 திங்கட்கிழமை
சர்வதாரி வருடம் வைகாசித் திங்கள் 6ஆம் நாள்

### நிகழ்ச்சி

* காலை 9மணிக்கு பூசை, தொடர்ந்து பொங்கல் ஆரம்பம், தீ மூட்டுதல் நடைபெறும்.
* மாலை 3மணிக்கு பூசை, தொடர்ந்து அம்பாள் வெளிவந்து தீ மிதித்தல் நடைபெறும். பின் அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்று பூசை நடைபெறும்.
* மறுநாள் 20.05.2008 செல்வாய்க்கிழமை மாலை 4மணிக்கு பொங்கல், அம்பாள் வீதி உலா வருதல் நடைபெறும்.

அம்பாள் அடியார்களும், ஆலய தர்மகர்த்தாவும்.


## கண்ணீர் அஞ்சலி

2007 பிரிவு மருத்துவ மாது பயிற்சி பெறும் தாதிய உத்தியோகத்தர் திருமதி யாசினி தமிழ்மாறன் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி மகாலக்சுமி இராஜேந்திரம்

அவர்களது மறைவிற்காக எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் கல்லூரிச் சமூகம்,
யாழ்ப்பாணம்.

(74219)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது அறுதிப் பெரும்பான்மையைக் கோட்டைவிட்டது.

எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, ஏ.எஸ். ஜவஹர் சாலி, எம்.எஸ். சுபைர் ஆகியோரே அரசுத் தரப்புக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறித் தாங்கள் எந்தப் பக்கமும் சாராமல் தனிக்குழுவாக இயங்கப் போகிறார்கள் என்று கிழக்கு மாகாண ஆளுநருக்கு நேற்றுக் கூட்டாகக் கடிதம் அனுப்பி வைத்திருக்கின்றார்கள்.

கிழக்கு மாகாணசபைக்கு கடந்த வாரம் நடைபெற்ற தேர்தலில் அரசுக் கூட்டமைப்பில் (போனஸ் ஆசனங்கள் இரண்டு உட்பட) இருபது உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான கூட்டமைப்பின் சார்பில் 15 உறுப்பினர்களும், ஜே.வி.பி. மற்றும் தமிழ் ஜனநாயகத் தேசிய கூட்டமைப்பு ஆகியவை சார்பில் தலா ஒவ்வொரு உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இப்போது ஆளும் தரப்பில் மூவர் வெளியேறித் தனிக்குழுவாக இயங்கத் தீர்மானித்துவிட்டதால் 37 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் ஆளும் தரப்பின் பலம் 17 ஆகக் குறைந்து, அறுதிப் பெரும்பான்மையை அது கோட்டை விட்டுள்ளது.

எனினும், 'தமிழ் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு' சார்பில் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஒரேயொரு உறுப்பினரான துரைரட்ணத்தின் ஆதரவு அரசுத் தரப்புக்குக் கிடைக்கும் எனக் கூறப்படுகின்றது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா அணி) தலைவரான துரைரெட்ணம் தமது ஆதரவை அரசுத் தரப்புக்கு வழங்கினாலும் 37 பேர் கொண்ட சபையில் - இப்போது - ஆளும் தரப்பின் நிலை 18 ஆக உயரலாம். ஆனால் தனித்து அறுதிப் பெரும்பான்மைப் பலம் பெறுவதற்கு அது போதுமானதல்ல. அதற்கு இன்னும் ஓர் உறுப்பினரின் ஆதரவு அவசியம்.

அத்தகைய நிலையில் எஞ்சியுள்ள ஒரேயொரு ஜே.வி.பி. உறுப்பினரின் நிலைப்பாடு முக்கியமானதாக - முடிவைத் தீர்மானிப்பதாக - அமையும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஐ.தே.கட்சி - மு.கா. கூட்டமைப்பின் சார்பில் தெரிவான 15 உறுப்பினர்களும், தனியாக இயங்கத் தீர்மானித்து ஹிஸ்புல்லா அணிக்கு ஆதரவை வழங்க முன்வந்து, அந்த அணிப்பக்கம் மேலும் ஓரிரு முஸ்லிம் உறுப்பினர்கள் பாய்வார்களானால் அத்தரப்பு கிழக்கு மாகாணசபையில் ஆட்சி அமைப்பதற்கு உரிமை கோரவும் வாய்ப்புண்டு எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையானுக்கு வழங்குவதற்கு அரசுத் தலைமை தீர்மானித்தமையை அடுத்தே, அரசுக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தனியாக இயங்கும் முடிவை ஹிஸ்புல்லா தரப்பினர் எடுத்தனர் என்று கூறப்படுகின்றது.

தாங்கள் அரசுத் தரப்பிலிருந்து வெளியேறி விட்டமையால், கிழக்கு மாகாணசபையில் அரசுக் கூட்டமைப்பு அறுதிப் பெரும்பான்மையை இழந்துவிட்டது என்றும் -

ஆகையால் அக்கூட்டமைப்பின் சார்பில் பிள்ளையானை முதலமைச்சராக நியமிப்பதோ, அவர் அப்பதவியை ஏற்று சத்தியப்பிரமாணம் செய்வதோ சட்ட விரோதம் என்று ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

முன்னதாக நேற்றுக்காலை, மேற்படி மாகாணசபைக்குத் தெரிவான ஆளும் தரப்பு உறுப்பினர்களையும் ஏனைய கட்சிப் பிரமுகர்களையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது அலரி மாளிகை இல்லத்துக்கு அழைத்துப் பேச்சு நடத்தினார்.

அந்தப் பேச்சுகளில் பிள்ளையான், ஹிஸ்புல்லா போன்ற அனைவரும் பங்குபற்றியிருந்தனர்.

அதன் பின்னரே தனித்து இயங்கும் ஹிஸ்புல்லாவின் அறிவிப்பு வெளியாகியது.(உ)


இணைந்த கணிதம்
Group/Personal Class
A/L 2009, 2010
A/L 2008 Paper Class
by: S.Jude (B.Sc) (Hons), (M.Sc)
தொடர்பு: 05, [illegible]
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P: 077 9672059


## தொடரப்போகும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் .

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கிழக்கின் முதலமைச்சராக நேற்று மாலை சத்தியப்பிரமணம் செய்து கொண்டார். இதன் பின்னர் அவர் ஆற்றிய கன்னிஉரையின்போதேஇப்படித்தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நாம் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பெற்ற வெற்றியானது ஒரு சாதாரண வெற்றியல்ல. ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ளும் எமது முயற்சியில் பல சவால்களையும், தடைகளையும், விமர்சனங்களையும், அர்ப்பணிப்புக்களையும் கடந்து வந்தே இந்த வெற்றியை நாம் பெற்றுள்ளோம்.

இந்த வகையில் நாம் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு - ஜனநாயகப் பாதையில் பணியாற்றுவதற்கான எமது விருப்பத்துக்கு இந்த வெற்றி வழிவகுத்துள்ளது. ஜனநாயக விழுமியங்கள் மீது நாம் காட்டிவந்த அர்ப்பணிப்பே மக்கள் மனதில் நிலைத்து இந்த மாபெரும் ஆணையை எமக்கு வழங்கியுள்ளது.

மக்களின் ஆணையூடாக நாம் தொடரப்போகும் இந்த ஆட்சியில் - நாம் பயணிக்கப் போவது முட்கள் பரப்பப்பட்ட கடினமான பாதை என்பதை நாங்கள் நன்கு அறிவோம். அதை நீங்களும் அறிவீர்கள் - என்றார். (சி)

## தற்கொலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரம் ஆகியவற்றுக்கு மிக நெருக்கமாகவுள்ள ஓரிடத்திலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

கலகம் அடக்கும் பொலிஸாரின் மேற்படி பஸ் ஒன்று, பக்கத்தில் தரித்து நின்ற இன்னொரு பஸ் மற்றும் சிறிய டிரக், இரண்டு ஓட்டோக்கள் மற்றுமொரு மோட்டார் சைக்கிள் என்பன இத்தாக்குதலில் பலத்த சேதம் அடைந்தன.

இந்த வாகனங்களில் வந்தோரும், அப்பகுதியில் அச்சமயம் நடமாடியோரும் காயமடைந்தனர்.

**தீச்சுவாலையும் புகை மண்டலமும்**

இக்குண்டு வெடிப்பின் அதிர்ச்சி கொழும்பு மையப்பகுதியை ஒரு கணம் உறைய வைத்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. குண்டு வெடிப்பை அடுத்து, அங்கு பெரும் தீச்சுவாலையும் புகைமண்டலமும் எழுந்தன.

கிழக்கு மாகாணத் தேர்தல் நடத்தப்பட்ட முறைமையை ஆட்சேபித்து ஐ.தே. கட்சி - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம் நேற்றுப் பிற்பகல் கொழும்பு, மருதானையில் நடைபெறவிருந்தது. அந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர் அங்கிருந்து கூட்டமாகப் புறப்பட்டு ஜனாதிபதி தங்கியுள்ள அலரி மாளிகைக்கு ஊர்வலமாக வரக்கூடும் எனக் கருதப்பட்டதால் அத்தகைய நிலைமையைத் தடுப்பதற்காக இப்பிரதேசத்தை அண்டி கலகம் அடக்கும் பொலிஸார் உஷார் நடவடிக்கையாக நிறுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறு தயார் நிலைக்காகக் கொண்டுவரப்பட்ட கலகம் அடக்கும் பொலிஸாரின் பஸ்ஸே நேற்று நண்பகல் 12 மணியளவில் தற்கொலைக் குண்டுதாரியினால் இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றது.

இத்தாக்குதலுக்கு சுமார் ஏழு கிலோ நிறையுடைய வெடிகுண்டு பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடும் எனப் பூர்வாங்கமாக மதிப்பீடு செய்யப்பட்டது.

இக்குண்டு வெடிப்பில் அமைச்சர் காமினி லொக்குகேயின் சாரதியும் பலியானார் என்றும் கூறப்பட்டது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த பத்து பொலிஸார் மற்றும் சிவிலியன்களின் நிலைமை மிக மோசமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள இவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கான தீவிர போராட்டத்தில் நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலை மருத்துவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலைக் குண்டுதாரியே இத்தாக்குதலை நடத்தியிருக்கிறார் என அரசு குற்றம் சுமத்தியிருக்கிறது. (சி)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் உள்ள கடற்புலிகளின் தளங்களை இலக்கு வைத்து நேற்றுக்காலை 6.45 மணியளவில் ஜெற் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை முல்லைத்தீவு நாயாறு கடல் நீரேரிக்கு மேற்குப்பகுதியில் உள்ள விடுதலைப்புலிகளின் தளத்தை இலக்குவைத்து நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் விமானப் படையினரின் ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது. (சி)

## கல்லடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் தேடுதல் மேற்கொண்டனர் என்றும், எனினும், எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தரப்பில் கூறப்பட்டது.

உயிரிழந்தவர்களின் சடலம் காத்தான்குடி வைத்திய சாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (சி)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியேற்ற அமைச்சர்களில் ஒருவர் துரைரெட்ணம். இவர் ஈ.பி. ஆர். எல்.எவ். (பத்மநாபா) பிரிவுத் தலைவராவார். அவரது கட்சியும் புளொட்டும், ஆனந்தசங்கரி தலைமையிலான விடுதலைக் கூட்டணியும் சேர்ந்து அமைத்த கூட்டமைப்புக்கு கிழக்கு மாகாண சபையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓரிடம் கிடைத்திருந்தது. அந்த இடத்துக்கு துரைரெட்ணம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அவர் அரசுத் தரப்புடன் நேற்று இணைந்து கொண்டு மாகாண அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்டார்.

மாகாண அமைச்சராகப் பதவியேற்ற மூவரில் மற்றொருவர் அமைச்சர் அதாவுல்லாவின் கட்சியைச் சேர்ந்தவர். மூன்றாவது பிரமுகர் ஐ.ம.சு. கூட்டமைப்பின் சார்பில் வெற்றி பெற்ற சிங்களவர் ஆவார்.

பொதுவாக மாகாணசபைகளுக்கு முதலமைச்சர் உட்பட ஐந்து அமைச்சர்கள் நியமிக்கப்படுவது வழமை. ஆனால், கிழக்கு மாகாணசபைக்கு முதலமைச்சருமாக மொத்தம் நான்கு பேரே நியமிக்கப்பட்டுள்ளனர். ஐந்தாவது அமைச்சர் பதவி நிரப்பப்படாமல் விடப்பட்டுள்ளது.

ஐ.ம.சு. கூட்டமைப்பில் தெரிவு செய்யப்பட்ட 20 உறுப்பினர்களில் ஹிஸ்புல்லா தலைமையில் மூன்று முஸ்லிம்கள் தனிக்குழுவாக இயங்க எடுத்த முடிவை அடுத்து அவர்களைத் தவிர எஞ்சியுள்ள 17 பேரும், ஈ.பி.ஆர். எல். (பத்மநாபா) அணியின் துரைரெட்ணமுமாக மொத்தம் 18 உறுப்பினர்கள் ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

நேற்று பிள்ளையான் முதலமைச்சராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட வைபவத்தில் முஸ்லிம் நாடாளுமன்ற அமைச்சர்களான அமீர் அலி, ரிஷாத் பதியுதீன், நஜீப் ஏ. மஜீத் ஆகியோர் பங்குபற்றவில்லை. வெளிநாட்டுக்குச் சென்றிருந்தவர்களைத் தவிர ஏனைய முஸ்லிம் அமைச்சர்கள் அந்த நிகழ்வில் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)


புவியியல்
S.P. கரன்
A/L 10 புதிய பிரிவு
DAY CLASS
11 AM
Papre Class
12 PM


## தற்கொலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடுப்பிரதேசம் மீது மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை காரணமாக, மடுத் திருத்தலப் பகுதி யுத்தப் பிரதேசமாக மாறி இருந்த நிலையில், திருத்தலத்தில் இருந்த மடு அன்னையின் திருச்சொரூபத்துடன் ஆலயக் குருக்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக தேவன் பிட்டி தேவாலயத்தில் தஞ்சமடைந்திருக்கின்றனர்.

இந்நிலையில் மடுத் திருத்தலத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான உயர் மட்டக் கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் மன்னார் ஆயர் இல்ல வட்டாரங்களுக்கும் இடையில் வவுனியாவில் இடம்பெற்றது. மேற்படி கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் வண. இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை மற்றும் குருமுதல்வர் அன்ரனி விக்டர் சோசை ஆகியோர் கலந்து கொண்டனர்.

அப்போது மடுத்தேவாலயப் பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கின்ற கண்ணி வெடிகளை அகற்றி அந்தப் பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு 6 தொடக்கம் 8 வாரங்கள் தேவைப்படும் என படைத்தரப்பு தெரிவித்திருப்பதாகவும், கண்ணி வெடிகளை அகற்றி அந்தப் பகுதியில் திருத்தங்களை மேற்கொண்ட பின்னரே மடுத் தேவாலயத்தை தம்மிடம் கையளிப்பதற்கு இணங்கியிருப்பதாகவும், குரு முதல்வர் கூறினார்.

குருமுதல்வர் மேலும் தெரிவித்ததாவது:

மடுத் தேவாலயத்தைச் சூழ உள்ள 2.5 கிலோமீற்றர் பகுதி புனித பிரதேசமாக மதிக்கப்பட வேண்டும் என்பதை இராணுவத்தினர் ஏற்றுக்கொண்டுள்ளனர். மடுப் பிரதேசத்தில் முழுமையாக கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு அதன் பின் நிர்வாகத்தை குருக்களிடம் வழங்கிவிட்டு அங்கிருந்து 2.5 கிலோமீற்றர் பின்னோக்கிச் செல்லத் தயாராக இருப்பதாகவும் படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

மடுத் தோவாலயத்திற்கு குருக்கள் அனுப்பப்பட்டு தேவாலயத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்த வேலைகளை மேற்கொண்ட பின்னரே மடு மாதாவின் திருச்சொரூபத்தை மீண்டும் ஆலயத்திற்கு கொண்டுவர முடியும் என நம்புகின்றேன் என்றார். (அ-சி)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா கோபாலபிள்ளை



வேலணையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா கோபாலபிள்ளை நேற்று (16.05.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சுமதி, இளங்கோ ஆகியோரின் அன்பு தந்தையும், ஏகேந்திரன், ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனும், தர்சிகா, தர்சன், தர்சிந்தா, தர்மிளா, தர்ணிகா, நிரோஷனன், தேனுகா, தணிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.05.2008) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் கட்டை ஆலடி மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகள், மகன், மருமக்கள்
(மருமகன்-இந்திரன்)

74/1A, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

### திருமதி சந்திரசேகரம் மனோரஞ்சிதம்



மலேஷியாவைப் பிறப்பிடமாகவும் அராலி, செட்டியார் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரசேகரம் மனோரஞ்சிதம் நேற்று (16.05.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லையா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சந்திரசேகரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு.திருமதி சதாசிவம் தம்பதியரின் மருமகளும், சச்சிதானந்தன், சுகுணாதேவி ஆகியோரின் சகோதரியும், நிர்மணி, நாகேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் குகராஜன் (SLRC), தேவராஜன் (Baharin), யோகராஜன் (U.K), கோமதி (U.K), சாந்திமதி (Australia) ஆகியோரின் பாசமிகு தாயும், உஷா, சுமித்திரா (Baharin), சாந்தி (U.K), பிறேம் (U.K), லக்ஸ்மன் (Australia) ஆகியோரின் மாமியும், மீரா, துளசி, கண்ணன், துவாரகா, Baharin ஐ சேர்ந்த மனோரஞ்சன், மயூரன், செந்தூரன், லண்டனைச் சேர்ந்த சிந்து, மதுரா, நிக்கலா, அஞ்சலா, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஷர்மிலா, ரமேஷ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.05.2008) சனிக் கிழமை மு.ப. 11 மணியளவில் இல.477, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், குகராஜன்
(மகன் - கிளை நிறைவேற்று உத்தியோகத்தர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்)

477, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2490


காமராஜர் பல்கலைக்கழகம் (மதுரை)
பல்கலைக்கழகத்தின் மே மாத பரீட்சைக்கு விண்ணப்பித்த BSc, BCom, BA விண்ணப்பதாரிகள் தங்கள் பரீட்சை அனுமதி அட்டை, நேர அட்டவணையையும் புதிய உயர் கல்லூரி வளாகஅலுவலகத்தில் 18.05.2008 முன்னர் பெற்றுக்கொள்ளவும்.
பரீட்சை ஆரம்பம் : 19.05.2008
M.A, M.Com, M.Sc, P.G. Dip. க்குரிய பரீட்சைகள்
ஆரம்பம் : 26.05.2008
விண்ணப்பதாரிகள் நேர அட்டவணை, அனுமதி அட்டை ஆகியவற்றை புதிய உயர் கல்லூரி வளாக அலுவலகத்தில் 24.05.2008 க்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.
யாழ்.இணைப்பாளர்கள்
காமராசர் பல்கலைக்கழகம் .T.P No :- 2228148.
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.05.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org